பதிவு எண் M. 4900 16-பக்கங்கள்.

# குடிஅரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு „ ரூ. 9-0-0 „ 0-2-6.

மாலை 22 } ஈரோடு 28-5-1949 சனிக்கிழமை } மலர் 38.

20 ஆண்டுகளுக்கு முன் பெரியார்.

## மெட்டிரியலிஸம்.

★

### தர்மமும்-பாவபுண்யமும்.

★

உலகிலுள்ள எல்லா மதங்களையும்விட இந்து மதத்தில்தான் தர்மம் என்பது இது இது என்று தெளிவாய் வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதினால், கண்மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாயிருக்கின்றன. இது சம்பந்தமாக இந்து மதமும், கோட்பாடுகளும், தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால், அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமே தவிர அதைத் தாண்டிப் போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடியாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்குவாரியாக-அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாமென்று வகுத்தெழுதி வைத்திருக்கிறார்கள். இதைக் கேட்ட பிறகுதான் இத்தகைய தர்ம சம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம்மாதிரியான காரியங்களினால் உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தகமேற்படுகின்றதென்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்கவேண்டும். இவற்றால்தான் நாடு முன்னுக்கு வருங்காரியங்கள் தடைப்படுகின்றன. எந்தத் தேசத்திலும் தர்மமில்லாமலிருக்கவில்லை. வெள்ளைக்கார தேசத்தின் தர்மம் நம் நாட்டுத் தர்மத்தைவிட பன்மடங்கு உத்தமமாயும், தேசத்திற்கும், சமூகத்திற்கும் உண்மையான நன்மையளிப்பதாயுமிருக்கின்றது. வெள்ளைக்கார நாட்டுத்தர்மம், கிணறு நிரம்பி வழிவதுபோல, அவன் ராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்ன வழக்கமென்றால், ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு போவான். அங்கு பிச்சையிடுவது சோம்பேறிகளை வளர்க்கும் முறை என்பதை நன்கறிந்து கொண்டார்கள். வெள்ளைக்கார நாட்டில் படிக்காதவன் என்றால் அவன் வெட்கித் தலை குனிந்துவிடுவான். நம் நாட்டிலோ தர்மம் என்று வந்தால் நமக்கென்ன, நம்மாலான சாப்பாடு போட்டுவிடுவோம், பிறகு அவன் தலைவிதி போலாகிறது; சரஸ்வதி நாக்கிலிருந்தால் எப்படியும் படித்துவிடுவான் என்ற தர்மம்தான் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் முன்னேறும்போது நாம் இக்கதிக்காளாகியிருக்கக் காரணமென்ன? நமது மதங்கள் தர்மங்கள் என்ற பல தத்துவங்கள்தான் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும் பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக, மருத்துவ ஆஸ்பத்திரிகளும், உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரிகளும் அவர்களுடையதாகத்தானிருக்கக் காண்கின்றோம். தப்பான வழிகளில் பிள்ளைகளைப் பெற்று கள்ளியில் போட்டு விட்டால், அவற்றை எடுத்து வளர்த்து சம்ரக்ஷிக்கும் அனாதை ஆஸ்ரமங்களும் அவர்களுடையதாகத்தானிருக்கின்றன. தெருவிலும் நடக்கக்கூடாது, அருகிலும் வரக்கூடாதென்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும், அவர்கள் சேர்த்துக் கல்வியளித்துச் சமத்துவம் பாராட்டி, மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கிவருவதைக் காண்கின்றோம். இவற்றை எல்லாம் நாம் எளிதில் மறக்க முடியாது; அல்லது மறைக்கவும் முடியாது. அவர்கள் நொண்டியை, முடத்தை, குருடர்களைக் கொன்று விடுகிறார்களா? அத்தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்வளவுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உதவி புரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன்தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள்

என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக்கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிட முடியாது. எந்தக் கொள்கையும், நீதியும், தர்மமும் காலத்திற்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறுதானிருக்கும். ராமேஸ்வரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும், சுக்கும் மட்டும் கொடுக்கிறார் என்றால், அதுபோல நாமும் இந்த சாணியைக் குவியலாய்க் கொட்டிக்கொண்டு வாரிக்கொடுப்பது தகுதியாகுமா? அந்தவிடத்திற்கு அவசியத்திற்கேற்றவாறு அது முக்கிய தர்மமாக விருக்கலாம். அதற்காக நாம் அந்த செட்டியார்மீது குறை சொல்ல முடியுமா? முன்னூறு நானூறு வருடங்களுக்கு முந்திய காலத்து தர்மமென்ற காரியங்கள் இப்போது செய்ய முடியாதவைகளாகத்தானிருக்கும். அப்போது அவை அவசியமாகச் செய்யவேண்டியவைகளாகத்தானிருந்திருக்கும். அக்காலத்தில் தற்போதிருப்பது போன்ற துரிதமான போக்குவரத்துச் சாதனங்களோ மற்ற வசதிகளோ கிடையாது. அந்தந்தநாட்டுமக்களுக்கு அந்தந்த ஊரே சுவர்க்கம். அக்காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போலத்தானிருந்திருக்க முடியும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு விளைச்சலும் அபரிமிதமாய் விளைந்து கொண்டிருந்தது. அக்காலத்திலும்மழை பெய்வதற்கு அவசியமானகாடுமுதலியவை அடர்ந்திருந்ததால் பருவ மழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல் விட்டாலும் அறுவடைக்குக் குறைவில்லை. அப்போது அதிகமாக விளைந்தாலும் தற்போதைப்போல விளைந்த தானியம் முழுதையும் வெளி ஊருக்குக் கொண்டுபோகப்படாமல் பெரும் குழிகள் வெட்டி அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாயிருந்துவந்தது. அன்றியும் அக்காலத்தில் பிச்சைகாரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளி நாட்டுக்கு அனுப்புவது என்றமுறை அக்காலத்தில் கிடையாது. அதற்குச் சாதனமும் கிடையாது. அதனால்தான் இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியமென்றும் எழுதிவைக்க இடமிருந்தது. அதனால் நம் நாட்டில் காலக்கிரமத்தில் பிச்சை எடுக்கும் ஜாதிகளென்றே பல ஜாதிகளும் தோன்றிவிட்டன. ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு வந்தாலும், சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமிருக்கிறார்கள் என்பதை யறிந்துதான் பிச்சைக்காரர்களும் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றனர். இத்தனை கோயிலிருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசியமாவென்று கேட்டால், "பாவி தடுக்கிறான் அவன் சொல்லைக்கேட்ட காதை லோஷன் போட்டுக்கழுவவேண்டு" மென்கிறார்கள். அக்காலத்தில் செல்வமிகுதியினால் செலவிடுவதற்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள். தங்கள் விளைபொருள்களுக்குச் செலவு வேண்டுமென்ற முறையில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு மேன்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக்காலத்தில் எத்தனை கடவுளிருந்தாலும் பூசைபோட்டு, எவ்வளவு பேர் வந்தாலும் சோறுபோடும் செல்வமும் செழிப்புமிருந்தது. அதனால்தான் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடமிருந்தது. ஆனால் இப்போதையக் கொள்கையும் மதக் கோட்பாடுகளும் கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறுமிருக்கவேண்டும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் எல்லா மதஸ்தர்களுந்தான் பாவம் செய்யக்கூடாதென்கிறார்கள். ஆனால் பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு அர்த்தம் வேறாகத் தானிருக்கின்றது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில், சுத்தமென்றால் மூன்றுவேளையும் குளிப்பதுதான் சுத்தமென்று எழுதிவைக்க முடியாது. அங்கு மணலை உடம்பில் தேய்த்துக் கொண்டாலும் குளித்துச் சுத்தமாவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால் அந்தச்சுத்தம் தப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்குள் வெளிக்குப்போனால் நான்கு செம்பு தண்ணீர்விட்டு கழுவுபவர்களும், போதாக்குறைக்குத் தலை முழுகுபவர்களுமிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் அதனைச் சுத்தமெனக் கருதப்படுகிறது. ஆனால் இவர்களைவிட பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன் காகிதத்தில் பாதியும் கால் சராயில் பாதியுமாகத்துடைத்துவிட்டுப் போகிறான். அவன் நாட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்காவிட்டால் பாவி என்கிறார்கள். அங்கு குளித்தாயாவென்று கேட்பதே மரியாதையல்லவெனக் கருதப்படுகிறது. இங்கு வியர்வையினால் குளிக்க வேண்டிய அவசியமுண்டு. அங்கு குளிரினால் அத்தகைய அவசியமில்லை. அவ்வாறே இந்துமதத்தில் எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம்; அவன் சங்கதியோ அதைப்பற்றிக் கவலையேயில்லை. இங்கு நாம் பசுவை அடித்தாலும் மகா பாவமென்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிடில் வேறுமார்க்கமில்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாமென்கிறான். மற்றவன் அதைப் பாவ மென்கிறான். இப்படிச் சௌகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும் கோட்பாடுகளுமிருக்கக்கூடும். ஆதலால் அனைத்தும் காலதேச வர்த்தமானத்திற்கேற்றவாறிருக்கவேண்டுமென்பது நன்கு விளங்கும். அன்றியும் அந்தந்தக் காலத்தில் திறமைக்கேற்றவாறு ஏமாற்ற ஏதேதோ எழுதிவைத்திருக்கலாம். அவற்றைக்குறித்து இப்போது கவலையில்லை. ஆனால், நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டியது, இன்றைய நிலைமையில் எப்படியிருக்கவேண்டு மென்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழியுண்டாவென்றும் பார்க்கவேண்டும். நாம், நமது செல்வம், அறிவு, ஒழுக்கம் முதலியவை பிரயோஜனமான வழியில் செலவிடப்படவேண்டு மென்பதனால், அது தர்மத்திற்கு விரோதமானதென்று சொல்லமுடியாது. இப்போது நாமிருக்கும் நிலையில் தர்மத்தின் பெயரால் சத்திரமும், சாவடிகளும் கட்டிக் கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்னாகும்? நமது நாட்டின் நிலைக்கும் மக்களின் தேவைக்கும்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

[உரிமை ஆசிரியருக்கே]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவுத் தொழில் செய்தவரை வேளாளர் எனவும், (வேள்—உதவி) கொண்டு கொடுத்துவந்தவரை **வணிகர்** என்வும், நாட்டைக் காத்துவந்தவரை **அரசர்** எனவும், ஒழுக்க நெறியைக் கற்பித்துவந்தவரை **அந்தணர்** எனவும் வழங்கி வந்தனர். இவை தொழில்பற்றிய பெயர்கள்; பெரும்பாலும் புலநெறி வழக்கிலேயே வழங்கிவருவன.

உழவுத் தொழில் மற்றைத் தொழில்களின் முதலும், இன்றியமையாச் சிறப்புடையதும் ஆனதால், தலைமைபற்றி வேளாளர் எனவே மற்ற தொழிலாளரும் அடங்குவர். வள்ளுவரும் 'உழவு' என்னும் அதிகாரத்தில் மற்றைத் தொழில்களையும் அடக்கினார். அந்தணர், அரசர், வணிகர் அல்லாத மற்றையாவரும் வேளாளரேயாவர். வாழ்வியலுக்கு வேண்டிய எல்லாத் தொழிலாளர்களும் வேளாளர் எனப்பட்டனர். அவர்களில் சிலர் வணிகம் செய்தும், சிலர் நாடு காத்தும், சிலர் நன்னெறி புகட்டியும் வந்தனர். முல்லை முதலிய நானில மக்களே இவர் என்பது, அய்ந்திணையின் தலைவர்களாக நானில மக்களையே கூறி, பின் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பாரும் அய்ந்திணைக்குரிய தலைவராவர் எனக் கூறுதலாலும், (அகத் 20—24) அகத்திணையைப் பாடும்போது ஒரு இயற்பெயரைச் சுட்டிக் கூறக் கூடாது என்பதனாலும், (அகத் 54) விளங்கும்.

ஆகவே, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன தொழில் பற்றிச் சிறப்பு வகையால் கூறப்பட்டனவேயன்றிப் பிறப்பு வகையால் கூறப்பட்டனவல்ல. எனவே, செல்வரும், வறியரும், நல்லரும், பொல்லரும், வலியரும், மெலியரும் இருப்பது மக்கள் இயல்பாகலான், இவற்றாலாகிய வேற்றுமையைத் தவிரப் பண்டைத் தமிழருக்குள் உண்ணல், உறைதல், கொள்ளல், கொடுத்தல் முதலியவற்றில் வேற்றுமை இருந்ததில்லை. ஆரியக் கலப்பால் வந்ததேயாகும், இன்றுள்ள வருண வேற்றுமைக் கொடுமை.

உழவுத் தொழிலாளர், "அஃதாற்றாது எழுவாரையெல்லாம் பொறுப்பதாலும்" (குறள்-1032) பொறுத்தல்—தாங்குதல். எத்தொழிற்கும் கொண்டு செலுத்தும் அறிவும், ஒழுக்கமும் இன்றியமையாச் சிறப்பினவாகலானும் அந்தணர் முதலினும், வேளாளரை முடிவிலும் வைக்கப்பட்டது. முன்னிரு தொழிலும் இடையறாது நடைபெறவும், அத் தொழில் செய்வோர் அச்சமின்றி வாழவும் அரசர் காத்தலாலும்; வணிகர் அந்தணர்க்கும், அரசர்க்கும் கொண்டு கொடுத்தலோடு, அரசியற்குப் பொருளீட்டித் தருதலாலும், வேளாளர் உண்டாக்கும் பொருள்களைக் கொள்வதோடு, வேண்டுவன கொண்டு கொடுத்தலாலும் அரசர்: வணிகரை முறையே இடையில் வைத்து அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என முறைப்படுத்தினரேயன்றி இவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை.

"மருத நிலத்தில் முதலில் உழவர் என்னும் ஒரேவகுப்பார் இருந்தனர். பின்பு, முறையேவாணிகம், அரசியல், துறவு என்பனபற்றி அவ் வகுப்பினின்றும் பிரிந்து போனவர் வணிகர், அரசர், அந்தணர் எனப்பட்டனர். உழவர் முதலிய நாற்பாலும் பிற்காலத்தில் ஏற்றத்தலைமை முறையால் தலைமாற்றிக் கூறப்பட்டன. (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என) கொல், நெசவு முதலிய கைத்தொழில் பற்றிப் பின்பு உழவர் குலத்தினின்றே பலர் பிரிந்தனர். (ஒப்பியல் மொழி நூல் 227ம் பக்கம்)

இவ்வாறு ஒரே குலமாயிருந்த தமிழர்கள், ஒவ்வொரு தொழில் செய்வோரும், தமது தொழில் முறைக்கேற்ப அவ்வத்தொழில் செய்வோரிடமே கொண்டுகொடுத்துவந்ததால், நாளடைவில் வெவ்வேறு குலமாயினர். அதாவது, மட்கலஞ்செய்வார், நெய்தொழில் செய்வார் பெண்ணை மணந்தால் தந்தொழிலுக்கு ஒத்துவராதாகையால், மட்கலஞ் செய்வார் மகளையே மணந்தனர். அவ்வாறே நெய்வோர் அத்தொழிற் பயிற்சியுடைய நெய்வோர் மகளையே மணந்தனர். இவ்வாறே மற்றவரும் தத்தம் தொழிலாளர்களிடையே கொண்டு கொடுத்து வந்ததால் குலப்பிரிவினையுண்டாயிற்று. ஆரியர் தமிழரிடைச் செல்வாக்குப் பெற்றபின், பிறப்பால் வேறுபட்டவரெனக் கட்டுக்கதை கட்டி, அவ்வாறே நடைமுறையில் கொண்டு வந்து தமிழர்களின் ஒருமை வாழ்வைக் கெடுத்து விட்டனர்.

**அந்தணர்.**

அரசர் முதலிய மூன்று வகுப்பாரினும் இல்லறம் நடத்தி அறிவும், ஆண்டும் முதிர்ந்தவர்கள் குடும்பத்தை மக்களிடம் ஒப்படைத்து விட்டு, உயிர்களிடத்து அருளுள்ள முடையராய்ப் பொது நலம் புரிந்து வரும் பெரியோரே அந்தணராவர். தொல்காப்பியர் இவரை 'அறிவர், தாபதர் என்பர். இவர் துறவுள்ளமுடையவர். வள்ளுவர்,

"அந்தணர் என்போர்
அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"
(குறள் 30)

எல்லா உயிர்களிடத்தும் அருளுடன் நடப்பதால், அந்தணரின் இலக்கணங் கூறினதுமன்றி, அக் குறளைத் துறவிகளைப்பற்றிக் கூறும் 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தில் வைத்ததும்,

# புதிய திராவிடத்தின் அரசியலமைப்பு.

★

(முன் இதழ் தொடர்ச்சி)

## புதிய திராவிடத்தின் அரசியல் அமைப்பு.

புதிய திராவிடத்தின் அரசியல் அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆராயும் முன், தற்போதைய அமெரிக்க அரசியல் அமைப்புமுறை எப்படி உள்ளது என்பதைக் கவனிப்போம்.

இன்றைய அமெரிக்கா உலக வல்லரசுகளில் தலை சிறந்ததாக விளங்குகிறது. அதனுடைய இராணுவ பலம் உலகத்தை மீண்டும் ஒரு யுத்தத்தில் ஆழ்த்திவிடுமோ என்ற திகைப்பிற்கு உள்ளாக்கியிருக்கிறது. அமெரிக்காவைப் போல் பொருளாதாரத்தில் முன்னேற்ற மடைந்துள்ள நாடு உலகத்தில் வேறெதுவுமில்லை. இவ்வளவு தூரம் அந்த நாடு முன்னேற்றம் அடைந்திருப்பதின் காரணம் அந்த நாட்டின் அரசியல் அமைப்பு முறைதான்.

அமெரிக்கா ஒரு நாடு அல்ல. அங்கு 48 நாடுகள் தனித்தனி சர்க்கார்களுடன் சுயவாட்சி உள்ளவைகளாக விளங்குகின்றன. அந்த 48 நாடுகளும் தங்களுக்குள் அமைத்துக்கொண்டிருக்கும் பொது சர்க்காருக்கு "அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்க்கார்" என்று பெயர். இந்தமுறைக்குத்தான் சமஷ்டி (Federation) என்று பெயர். ஆயினும்இந்த 48நாடுகளும்சமஷ்டிக்கு உட்பட்டவைகள் என்று கூறமுடியாது. இந்த நாடுகள் தாமாகவே சம்மதித்து சமஷ்டியில் சேர்ந்திருப்பதாக கருதப்படுகின்றது. இந்த நாடுகளாகப்பார்த்து சமஷ்டி அரசாங்கத்திற்கு விட்டிருக்கும் அதிகாரங்கள் தவிர, சமஷ்டி மாகாண அரசாங்கங்களின் உரிமைகளில் தலையிடமுடியாது. சமஷ்டியில் அவற்றை மாகாணங்கள் என்று சொல்லாமல் "நாடுகள்" (States) என்றே வழங்கப்படுகின்றன. இம்மாதிரி ஒரு மத்திய சர்க்காரை ஏற்படுத்தி, அதனிடம் சில பொதுவான அதிகாரங்களை நிர்வகிக்கும்படி விட்டு வைப்பதுதான் நாட்டு நலத்திற்கும், முன்னேற்றத்திற்கும், பாதுகாப்புக்கும் உகந்தது என்று கருதி ஒரு சமஷ்டி சர்க்காரை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் அமைக்கப்பட்டிருப்பது போன்ற ஒரு சமஷ்டி அரசியல் அமைப்புதான் திராவிடத்திற்கு ஏற்றதென்று நாம் பல காலமாகவே வலியுறுத்தி வருகிறோம். இந்த சமஷ்டியின் உறுப்புக்களாக விளங்கும் மாகாணங்களும் தனித்தனி நாடுகளாகவே கருதப்படும். இன்றைய மொழிவாரி மாகாணப்பிரிவினைத்திட்டப்படி திராவிடத்தில் 4 மாகாணங்கள் அதாவது நாடுகள் ஏற்படும். இந்த நான்கு மாகாணங்களும் வடநாட்டுக்கு அடிமைப்பட்டிருப்பதைவிட அதனின்று பிரிந்து, தங்களுக்குள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக்கொண்டு சுதந்தர நாடுகளாக வாழவேண்டும் என்பதுதான் திராவிடர் கழகத்தின் இலட்சியம்.

புதிய திராவிடம் தமிழ்நாடு, ஆந்திர நாடு, கேரளநாடு, கர்னாடகநாடு ஆகிய நான்கு வட்டாரங்களின் கூட்டாட்சி நாடாக இருக்கும். அமெரிக்காவைப் போல் இங்கு நான்கு நாடுகளும் தங்களுக்கிடையில் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கும். அந்த சமஷ்டி "ஐக்கிய திராவிடக் குடியரசுகள் சர்க்கார்" என்பதைப் போன்ற பெயருடன் விளங்கும். இந்த சமஷ்டியில் அங்கம் வகிக்கும் நாடுகளும் தாமாகச் சம்மதித்து சமஷ்டியில் சேர்ந்திருப்பதாகக் கருதப்படுமே தவிர அவை சமஷ்டியின் அடிமை நாடுகள் என்று கூறமுடியாது. இம்மாதிரி ஒரு சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளாமல் தனித்தனியாகவே இருந்தால் என்ன என்று சிலருக்குத்தோன்றும். அப்படியிருந்தால் நாட்டின் பொதுமுன்னேற்றமும் பாதுகாப்பும் பாதிக்கப்படும் என்றுதான் கூறமுடியும்.

சமஷ்டி அரசாங்கம் ஏற்படும் பொழுது சமஷ்டிக்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் உள்ள அதிகாரங்களை தெளிவாக வரையறுத்து விடுவது வழக்கம். இம்மாதிரி அதிகாரங்களைப் பிரிவினை செய்து நிர்ணயித்தபின், ஒன்றின் அதிகாரத்தில் மற்றொன்று தலையிடவோ, அல்லது தடைப்படுத்தவோ முடியாது. அதுவுமன்றி, சமஷ்டி அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரங்கள் மாகாண அரசாங்கங்கள் தாமாகச் சம்மதித்து விட்டுக்கொடுத்தவைகளாகத்தான் இருக்கமுடியும். இம்மாதிரி ஏற்படும் ஒரு சமஷ்டி மாகாண அரசாங்கங்களை அடக்கி ஆள்வதாகவோ, அதன் உரிமைகளைப் பறிப்பதாகவோ எப்படி இருக்கமுடியும்? இந்த நான்கு நாடுகளும் பொதுவாக நிர்வகிக்கவேண்டிய விஷயங்கள் என்று கருதுபவைகளைத்தான் சமஷ்டியின் நிர்வாகத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இப்படி ஏற்படவிருக்கும் சமஷ்டியின் அதிகாரங்கள் என்னென்னவென்பதை இந்த நான்கு நாடுகளும் சேர்ந்து அமைக்கும் அரசியல் நிர்ணய சபைதான் முடிவு செய்யும்.

மொழிவாரி மாகாணப்பிரிவினையை

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

---

"நிறைமொழி மாந்தர்
ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே
மந்திரம் என்ப" (செய் 178)

பெரியோர்களின் ஆணையால் சொல்லப்பட்டுப் பிறர்க்குத் தெரியாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் எனத் தொல்காப்பியர் கூறிய துறவிகள் செய்தியையே,

"நிறைமொழி மாந்தர்
பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"
(குறள் 28)

என்று 'நீத்தார் பெருமை'யில் குறித்தும், இல்லறம் நீத்துத் துறவறம் புக்குப் பொதுநலம்புரியும் புனிதர்களே அந்தணர்என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

தமிழ்த் துறவியரான அந்தணர் சிறந்த அறிஞராயும், நல்லொழுக்கமுடையவராயும், உயர்குணமுடையவராயும் இருந்தமையான் அரசர்கள் அவர்களை அறிவுரை கூறுதற்குத் துணைக்கொண்டனர். இதையே வள்ளுவர், "பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை" என்னும் அதிகாரங்களில் கூறியுள்ளார். அரசர் போர்க்குச் சென்றபோது, அவர்க்குத்துணையாக இருந்த அந்தணப் பெரியார்களே அரசு புரிந்து வந்தனர்.

தலைவன், அந்தணரிடத்து இன்னவாறு நடந்து கொள்ளவேண்டும் என்று தலைவிக்குக் கூறுதலான் (கற் 5) இவர் ஆரியர் முனிவர் போல் காட்டகத்தே சென்று தங்கிக்காலங்கழிக்காமல், மக்களிடையே நெருங்கிய தொடர்டையராய் நாட்டகத்தே இருந்த நல்லறிவாளராவர்.

# திராவிடர் கழகமே தொழிலாளர் ஸ்தாபனம்

## அறியாமையால் அந்தோ! படுமோசம்.

## பொன்மலையில் பெரியார்.

★

22—5—49-ம் நாளில் பொன்மலை திராவிட வாலிபர்கழக 8-வது ஆண்டு விழாவில் மத்திய திராவிடர் கழகத் தலைவர் தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் பெரியார் ஆற்றிய பேருரை.

பேரன்புமிக்க தலைவரவர்களே, தாய்மார்களே, தோழர்களே! இன்று நடைபெறும் இவ்வாண்டுவிழாவிலே நான் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். மற்றும் என்னைப் பெருமைப்படுத்தி வாழ்த்துரைகள் வழங்கிய தொழிற் சங்கங்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### பெருமைப்படுகிறேன்.

தொழிலாளர் நிறைந்த இப் பகுதியிலே திராவிட வாலிபர்கழகம் 8-ஆண்டுகளாக வேலை செய்து வருவதையறிந்து நான் பெருமைப்படுகிறேன். காரணம் என்ன? தொழிலாளருக்கு உள்ளபடியே பாடுபடும் ஸ்தாபனம் திராவிடர் கழகம் ஒன்றுதான் என்பதுவேயாகும். மற்ற ஸ்தாபனங்கள் தொழிலாளர்க்கும்--முதலாளிக்கும் இடையேயிருந்து தங்கள் தங்கள் கவலைச் சாதித்துக்கொள்பவைகள் என்பதே எனது அழுத்தந்திருத்தமான எண்ணமாகும். இவ்வபிப்பிராயம் இன்று நேற்றல்ல எனக்கு ஏற்பட்டது. கடந்த 30 ஆண்டுகளாகவே இந்தக் கருத்து எனக்கு இருந்து வருகிறது. இன்றைய நிலையில் அவ்வெண்ணம் மேலும் ஊர்ஜிதமாகிவிட்டதை நான் காண்கிறேன்.

### இஷ்டமில்லை என்றாலும்......

சில மாதங்களுக்குமுன் நடைபெறுவதாயிருந்த அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது பத்திரிகைக்காரர்கள் அதுபற்றி எனது அபிப்பிராயம் கேட்டனர். அது சமயம் நான் திருச்சியில் நமது கழக நிர்வாகத் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தேன். அங்குதான் பத்திரிகை நிருபர்கள் என்னைச் சந்தித்தது.

"வேலை நிறுத்தம் செய்வது எனக்கு இஷ்டமில்லை. ஆனால் வேலை நிறுத்தம் தொடங்கிவிட்டால் அதைத்தான் நான் ஆதரிப்பேன்" என்றேன். இவ்வாறு கூறுவது எங்களுக்குப் புரியவில்லையே என்றனர் பத்திரிகை நிருபர்கள்.

உங்களுக்குப் புரியாதுதான், நான் புரியும்படி விளக்கம் கூறுகிறேன் என்று மேலும் அவர்களிடம் நான் சொன்னேன், நமது குழந்தைகள் இருக்கின்றன; நெருப்புக்கிட்டே போகாதே என்று எவ்வளவோ பயப்படுத்தித்தான் வைக்கிறோம். எனினும் அக் குழந்தை தீயில் குதித்துவிட்டு, அய்யய்யோ சுடுதே! சுடுதே!! என்று அலறும்போது, பெற்றெடுத்த தாயோ, தகப்பனாரோ அந்தக் குழந்தையை மேலும் ஏன் தீயில் குதித்தாய் என்று கடிந்து இரண்டு உதை கொடுப்பது அறிவுடைமையாகுமா? அவர்கள் செய்தது தவறாயிருப்பினும் அந்தச் சமயத்தில் நாம் அவர்களைக் கடிந்து தண்டிப்பது நியாயமில்லையல்லவா? அதேபோன்று வேலை நிறுத்தம் கூடாதென்று கடைசி நேரம்வரை நான் ஒவ்வொரு வேலை நிறுத்தக் காலங்களிலும் கூறிவந்திருக்கிறேன். இதனால் நான் தொழிலாளிக்கும் துரோகி என்றுகூட கெட்ட பெயர் சூட்டப்பட்டேன். ஆனால் வேறு வழியின்றி வேலைநிறுத்தம் துவக்கப்பட்டுவிட்டால், மற்றவர்களைக் காட்டிலும் நானே அதில் அதிகக் கவலைப்பட்டு என்னாலியன்ற தொண்டு புரிந்துவந்திருக்கிறேன். அத் தன்மையிலேயே அ. இ. ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் அறவே கூடாதென்பதும், எக்காரணத்தாலேனும் துவக்கப்பட்டுவிட்டால் நானும் எனது இயக்கத்தாராகிய திராவிடர் கழகத்தினரும் ஆதரித்தே தீருவோம் என்பதும்" என்று கூறினேன். இவையனைத்தையும் பத்திரிகை நிருபர்கள் எழுதிக் கொண்டார்கள். ஆனால் அதைச் சிறிதுகூட வெளியிடவேயில்லை.

### பத்திரிகைகளின் மோசடி.

சில நாட்கழித்து மற்றொரு காரியமாக அதே நிருபர்கள் என்னிடம் வந்தனர். என்னையா! முன்பு தாங்கள் எடுத்துக்கொண்ட செய்தி வெளியிடவேயில்லை. மீண்டும் வேறு காரியத்துக்காக என்னை அபிப்பிராயம் கேட்க வந்துவிட்டீர்களே என்று சற்று கோபமாகக் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்; நாங்கள் என்ன செய்வது? நீங்கள் தொழிலாளரின் வேலை நிறுத்தத்திற்கு எதிரிடையாக அபிப்பிராயம் கூறுவீர்கள் என்று பத்திரிகை உலகத்தார் நினைத்தார்கள்போலும். ஆகவேதான் நாங்கள் அனுப்பிய செய்தியை கத்திரித்து விட்டார்கள். அது எங்கள் குற்றமல்ல, பத்திராதிபர்களின் குற்றமாகும் என்றனர்.

### நம் தொண்டின் முக்கியம்.

இதை ஏன் கூறுகிறேன் என்றால் சுயமரியாதை இயக்கமோ அல்லது திராவிடர் கழகமோ ஆற்றும் போதத் தொண்டுக்கு ஏதாவது முக்கியமிருப்பின், அது பாடுபட்டுழைத்துப் பலனறியாது தவிக்கும் ஏமாந்து வாழும் தொழிலாளிகளுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கும் நல் வாழ்வை ஏற்படுத்துவதைத் தவிர வேறொன்றுமில்லை யென்பதை எடுத்துக் காட்டவேயாகும். இதைத் தவிர எங்களுக்கு பட்டம், பதவி, தேர்தல், ஓட்டு முதலியவைகளில் கவலையும் கருத்தும் வைத்து அதற்காகத் தொழிலாளர் தயவைப் பெற அவர்களிடத்திலே வீண் படாடோப வார்த்தைகளைக் கூறி ஏமாற்றிக், கட்சியின் அரசியல் ஆதிக்கத்துக்காக அவர்களது சக்தியைப் பயன் படுத்திக்கொள்ளும் சூதோ, சூழ்ச்சியோ எங்களிடத்தில் கிடையாது.

### தொழிலாளரின் குறைகள்.

பொதுவாகத் தொழிலாளர்களும் அவ்வித ஏமாற்று வலைகளில் சிக்கி மயங்கித் தங்களது வாழ்வைக் கெடுத்துக் கொள்பவர்களாக இருக்கிறார்களேயன்றி, சிறிதாவது அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக ஆவதற்கு முயற்சி செய்வது கிடையாது. தொழிலாளர் அவ்வித அறிவு பெற்றுவிட்டால், எந்த அரசியல் கட்சிக்காரர்தான் அவர்களை ஏமாற்ற முடியுமென்று கேட்கிறேன். உங்களது ஒன்றுபட்ட சக்தியை நீங்கள் உணர்ந்துவிட்டால் உங்களை எதிர்க்க யாரால் முடியும்? ஆனால் இன்று தொழிலாளர்களாகிய நீங்கள் அரசியலின் பேரால் பலவிதப் பிரிவுகளாகப்

பிரிக்கப்பட்டு, ஒற்றுமையின்றி வாழ்கின்றீர்கள். காங்கரஸ், கம்யூனிஸ்ட்டு, சோஷலிஸ்ட்டு, தீவிரவாதி என்று இவ்வாறாகப் பிரிக்கப்பட்டு உங்களுக்குள்ளாகவே ஒருவரோடு ஒருவர் பகைத்துக்கொள்வதும், அடிதடிகளில் இறங்குவதும், போட்டிச் சங்கங்கள் அமைப்பதும், காட்டிக்கொடுப்பதும் ஆன காரியங்கள்தான் இன்றையத் தொழிலாளர் இயக்கமாக இருந்துவருகிறது.

இன்றையத் தொழிலாளர் தலைவர்கள் எனப்படுவோரின் தொண்டும், இப்படியாகக் கட்சிப் பிரிவினைகளை உண்டாக்கித், தங்களது சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்வதாக இருக்கிறதேயன்றி, இதுவரை இவ்விதக் கட்சிப் போட்டிகளால் தொழிலாளருக்கு இம்மியளவாவது பயனேற்பட்டதென்று எவராவது கூறமுடியுமா என்று கேட்கிறேன். இவ்வளவுக்கும் காரணம் தொழிலாளர்கள் அறிவு வளர்ச்சி பெறாததேயாகும்.

எனவேதான் திராவிடர் கழகத்தாராகிய நாங்கள், அரசியலில் வீணாகக் காலங்கழிப்பதைவிட மக்களுக்கு வேண்டிய அறிவுத்துறையிலே பாடுபட்டுவருவதின் கருத்தாகும். தாழ்த்தப் பட்டமக்களுக்கும், பாடுபட்டுழைத்தும் பலனறியாத பாட்டாளிமக்களுக்கும் பொதுவாக நம்நாட்டு மக்களுக்கு அறிவு, மானம், ரோஷம், உண்டாக்கும் ஸ்தாபனந்தான் திராவிடக் கழகமென்பதும், அதன் வேலைத் திட்டங்களுமாகும்.

### ஆரியச் சூழ்ச்சி.

நம் நாட்டுக்கு கி. மு. 2000-ஆண்டு காலத்தில் திராவிடம் என்றே பெயர் இருந்தது. இராமாயணங்களிலும் புராணங்களிலுங்கூட நம் நாட்டுக்கு திராவிடமென்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆரியர் இந்நாட்டுக்குக் குடியேறிய பின்னர்தான் திராவிடம் என்பதற்குப் பதிலாக தென்னாடு என்று பெயர் கொடுக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு என்றும் வழங்கிவரலாயிற்று. திராவிடம், திராவிடர் என்பதால் ஆரியர் ஆதிக்கத்துக்கு என்றும் எதிர்ப்பு இருக்குமாதலால், திராவிடம் என்ற உணர்ச்சியை அறவே அழித்தொழிக்கச் சூழ்ச்சி செய்துவரலாயினர்.

ஆனால் தற்சமயம் இந்நாட்டிலுள்ள பார்ப்பனர் கூறலாம்; நாங்கள் ஆரியரல்ல நாங்களும் இந்நாட்டினர்தானென்று. ஆனால் இதே சமயத்தில், நம் நாட்டுப்பற்றோ, மொழிப்பற்றோ, சிறிதும் கிடையாது. ஆரியக் கலாச்சாரத்தையே பின்பற்றி வருவதோடல்லாமல், நமது முன்னேற்றத்தையும் முயற்சியையும் ஒழிப்பதே அவர்களது முழுமுயற்சியாகக் கொண்டிருக்கின்றனர். இவைகளைக் கைவிடாமல் நாங்கள் ஆரியரல்ல என்று கூறிவிட்டால் போதுமா?

உதாரணமாக ஆங்கிலோ இந்தியர்கள் எப்படியோ அதே போலத்தான் இந்நாட்டுப் பார்ப்பனர்களும்.

ஆங்கிலோ இந்தியர்கள், நம் நாட்டுத் தாய்மார்கள் ஈன்றெடுத்தவர்கள் தானே? ஆனால் அவர்களுக்கு சற்றாவது நம் நாட்டு உணர்ச்சியிருக்கிறதா? நமது மக்களைப்பார்த்தால் 'டேய்! தமில் மனுசா' என்று கேவலமாகத் தானே கூறுகின்றனர். அவர்கள் யார்? எந்த நாட்டில் எப்படிப் பிறந்தவர்கள் என்ற வரலாற்றை அறியாமல், தான் ஏதோ நேராக அய்ரோப்பாவில் பிறந்து இங்கு குடியேறியது போல ஜாதி ஆணவத்துடன் அல்லவோ நடக்கிறார்கள்.

அதைப்போலவே இந்நாட்டுப் பார்ப்பனர்களும், மேல் நாட்டிலிருந்துகுடியேறிய ஆரியர்களுக்கும்,நம் நாட்டவர்களுக்கும் பிறந்தவர்களாயிருந்துங்கூட, ஆரிய ஜாதி முறைகளையும், அதற்கான ஆணவத்தையும் கொண்டு நாட்டுக்குரிய நம்மைக் கீழ் ஜாதிகளாக, அடிமைகளாக, மதித்து நடத்துவதும், அதற்கேற்ப நம் நாட்டு மன்னர்களை ஏமாற்றி ஜாதி-மதம் கடவுள்-புராணம்-இத்காசம் பேரால் தங்களுக்குத் தனி சலுகைகளும் பெற்று, பாடுபட்டு உழைக்கும் ஏழை மக்களுக்கு வாழ்வில் வறுமையும் தொல்லையும் இருக்க, பாடுபட்டுழைக்காத ஒருகூட்டத்துக்கு வாழ்க்கையிலே மிதமிஞ்சிய ஆதிக்கமும் இருந்து வருகிறது.

### திராவிட உணர்ச்சி வலுத்தால்......

இன்றுகூட எந்தப் பார்ப்பனனையாவது பார்த்து "நீ என்னையா பிராமணனா" என்று கேட்டால், இன்றைய நிலையில் அவ்வாறு கூறிக்கொள்ளச் சற்றுஅச்சம்கொண்டாலும், "நான் பிராமணனல்ல' என்றுகூறுவானேயன்றி "நானும் திராவிடன்தான்' என்று கூற முன்வரமாட்டார்களே? ஏன்? திராவிடர் என்ற உணர்ச்சி வலுத்துவிட்டால் பார்ப்பனீய ஆதிக்கத்துக்கு, அன்றே அழிவு ஏற்பட்டுவிடும் என்பதாலேயாகும்.

எனவேதான் திராவிடக் கழகத்தாராகிய நாங்கள் பார்ப்பனர்களுக்கு தனிப்பட்ட தொல்லையோ தீங்கோ விளைவிப்பதேன்பது எங்கள் கோள்கையல்ல; பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து மக்களிடையே ஒன்றுபட்ட சமுதாய உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமேன்பதாகும் என்று கூறுகிறோம். இதை இந்நாட்டுப் பார்ப்பனர்கள் இனியாவது அறிந்து தங்களது தவறுதலைத் திருத்திக்கொள்ள வேண்டும். அதைவிடுத்து எங்களது முயற்சியை அழிக்க மேலும் சூழ்ச்சிகள் செய்வார்களேயானால் அது தங்களுக்குத் தாங்களே அழிவு தேடிக்கொள்வதாக முடியும். பார்ப்பனர்களுக்குத் தனித் தொழிலாளர் கழகம் என்று ஒன்று இருக்கிறதா? காரணம் என்ன? உழைக்கும்வேலை அவர்களுக்குக் கிடையாது. எதற்கும் லாயக்கற்ற பார்ப்பனனாயிருப்பினும் கடவுள்பேரால்பாடுபடாமலேயே சுகவாழ்வு வாழ்வதேன்? பிறவியின் பேரால், ஜாதியின் பேரால் ஒரு கூட்டம் ஆதிக்கம் செலுத்தும் அக்கிரமம் இந்நாட்டைத் தவிர வேறு நாட்டில் இருக்கிறதா? அதுவும் சுயராஜ்யம் பெற்றபின்னரும் இந்த அக்கிரமம் இருக்கலாமா? அறிவின் பேரால், உழைப்பின் அருமையின் பேரால் ஒருவனுக்கு உயர்வும் நல்ல பலனும் இருக்க வேண்டுமா? ஜாதியின் பேரால் பதவியின் பேரால் சோம்பேறிகளெல்லாம் உயர்ந்தவர்கள் என்று புகழப்படுவதா என்று கேட்கிறேன்? தொழிலாளத் தோழர்களே! இந்த உணர்ச்சியும், மானமும், ரோஷமும் உங்களுக்கு ஏற்படாமல், உங்களுக்கு என்னதான் கூலி உயர்ந்தாலும் பயன் என்ன?

### சமுதாய அமைப்பு.

சமுதாயத்திலே புகுத்தப்பட்டு வேரூன்றியுள்ள பார்ப்பனீய மூடப் பழக்க வழக்கங்களுக்கு நீங்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் பெரும் பகுதியை பாழாக்குகின்றீர்களே? இதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டாமா? இதைத்தான் திராவிடர் கழகம் கூறுகிறது. சமுதாய அமைப்பிலே புதியதோர் மாற்றம் வேண்டும். அந்த மாறுதலை அடிப்படையாகக் கொண்ட நல்லாட்சி வருக்க வேண்டும்.

சமுதாய அமைப்புப்பற்றி நம் மக்களுக்குச் சற்றாவது தெளிவு உண்டா? பாமர மக்களை நான் கூறவில்லை. பெரிய பெரிய பண்டிதர்கள், புலவர்கள், ராஜ தந்திரிகள் முதல் பண்டாரச் சன்னதிகள்வரைதான் தெரியுமா? சமுதாய அமைப்பு எப்படியிருக்க வேண்டுமென்று.

ஒருவன் பறையனாகவும், ஒருவன் சூத்திரனாகவும், ஒருவன் பார்ப்பனாகவும் இருக்க வேண்டுவதும், இதன் காரணமாய் ஒரு கூட்டம்மட்டும் பாடுபடாமல் உல்லாச வாழ்வு வாழ்வதும் சரியான சமுதாய அமைப்பு என்று எவராவது கூறமுடியுமா? கூறமுடியவில்லையென்றால், அந்த அமைப்பை மாற்றியமைக்க வேண்டுவதுதானே

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# தாசி அபரஞ்சி

"அவள் பேச்சிலே ஒரு பரவசம்;- நடையிலே ஒரு தனி அழகு; அவள் சிரிப்பு நம்மை இன்பபுரிக்கு அழைத்துச் செல்லுகிறது! தந்தப் பதுமை போன்ற அவள் மேனியை தங்க ஆபரணங்கள் அணி செய்கின்றன என்பதெல்லாம் உண்மைதான் என்றாலும் அவள் தாசி ஆயிற்றே!"

"தாசி அல்லடா அவள். வானத்திலே தோன்றி மறையும் தாரகை! அப்படித்தான் அவள் குல முறைப்படி தாசியானாலும், அவள் என்ன சாமான்யப்பட்டவளா!..........நாலணாவைக் காலணாக்களாக மாற்றிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு "அந்தத் தெரு" வழியே நடக்கும்போது நான்... நீ...என்று போட்டிபோட்டுக் கொண்டு வாசலில் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்கிறார்களே, அவர்கள் போலல்லடா நம் அபரஞ்சி...அபரஞ்சியின் அழகைப் பருக நினைப்பவன் ஆயிரம் பொன்னல்லவா கொடுக்க வேண்டும்! உன்னையும் என்னையும் போன்ற திண்ணை தூங்கிகளால் முடியுமா?— அதைப் பற்றி நினைத்தாலே ஆயிரம் பொன் கொடுக்க வேண்டுமே!"

*　　　　*

ஊரார் இதுபோன்று உரையாடல் நடத்தினர், அபரஞ்சி என்ற தாசியைப்பற்றி! பணமூட்டைகள் அவள் பாதமலரடியை வருட அவள் வீட்டை மூற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர். அவளை மனதால் நினைத்தாலும் சரி, அல்லது நேரிடையாகவே இன்பம் நுகர எண்ணினாலும் சரி, ஆயிரம் பொன் எண்ணி வைத்துவிட வேண்டும்! இது அபரஞ்சியின் திட்டம்...... திட்டமட்டுமல்ல, நடைமுறைக் கீதமாகவும் ஆகியது!

*　　　　*

ஒரு நாள்!—அந்த நாள் ஊரிலே மிக முக்கியமான நாள்—ஊர் மக்கள் கோவிலிலே திரண்டிருந்தனர்.

அபரஞ்சி விசேஷ அலங்காரத்துடன் கோயிலைச் சுற்றிப் பவனி வந்தாள்.

கோயில் சுற்றை முடித்துக் கொண்டு குளத்தங்கரை அருகே அவள் வந்து கொண்டிருந்தாள்!

நடுத்தர வயதுள்ள இருவர் குளத்துப் படித்துறையில் அமர்ந்து உரையாடல் நடத்திக் கொண்டிருந்தனர்.

"அபரஞ்சி" என்ற தன் பெயர் அவர்களின் உரையாடலில் அடிபடுவதைக் கண்டு, மரத்தின் மறைவில் நின்று அவர்கள் பேச்சைக் கேட்டாள்.

*　　　　*

"உப்பரிகையில் உலவிக் கொண்டிருந்தாள் அந்த உல்லாசி—ஒரு முறை திரும்பிப் பார்த்தேன் "வாருங்கள்" எனக் கை நீட்டி அழைத்தாள்!"

"அபரஞ்சியா! உன்னை அழைத்தாள்!"

"ஆமாம்! குறுக்கே பேசாதே, சொல்வதைக் கேள்!—அந்த உல்லாசியின் அழைப்பு எனக்கு ஆச்சரியத்தை அளித்தது...தயங்கி நின்றேன் ...மறுமுறையும் முன்போலக் கை நீட்டி அழைத்தாள். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவளிடம் போய்ச் சேர்ந்தேன். வானத்தில் நிலவு பவனி வந்தது! ஒய்யார நடையுடன் பஞ்சணையில் போய் அமர்ந்தாள். என்னையும் வரும்படி சமிக்கை செய்தாள். பஞ்சணையை நெருங்க மறுத்து என் கால்கள் கெஞ்சின! இந்த என நிலையைப் புரிந்து கொண்டதுபோல் அவள் கரத்திலுள்ள வளையல்கள் சிரிப்பு ஒலியை முழக்கின! எப்படியோ அவளருகில் சென்று அமர்ந்துவிட்டேன்.........

நடுங்கிய என் கரங்களால் தொட்டிழுத்தேன் துவண்டுவிட்டாள்!

"அபரஞ்சி" என்றேன் ஆர்வத்தோடு;

"அன்பரே" என்றாள் அதரத் துடிப்போடு;

"பிறகு என்ன சீக்கிரம் சொல்லப்பா!"

"பிறகு என்ன! விடிந்துவிட்டது. விழித்துக் கொண்டேன்!"

"அடபாவி! இவ்வளவு நேரம் சொன்னதெல்லாம நீ கண்ட கனவைப் பற்றியா!...சரி போகட்டும் என்னிடம் கூறியதுபோல வேறு யாரிடமும் இதைக் கூறிவிடாதே — அபரஞ்சி காதுக்கு இந்தச் செய்தி எட்டியதோ! அவ்வளவுதான். ஆயிரம் பொன் கொடுத்தால்தான் ஆள் தப்பமுடியும்!"

"ஆள் தப்ப முடியாது! இதோ இருக்கிறேன். எடும் சுவாமிகளே ஆயிரம் பொன்.!'... என்று கூறிக் கொண்டே, மிரட்டும் பார்வையுடன் படித்துறையில் இறங்கி வந்துகொண்டிருந்தாள் அபரஞ்சி!

*　　　　*

கனவு கண்ட ஆணழகர் விழித்தார்! கும்பல் கூடிவிட்டது!

*　　　　*

அபரஞ்சி அந்த ஆணழகரை இழுத்துச் சென்றாள் ஊர் நீதிமன்றத்துக்கு.

*　　　　*

"என்னை நேரிடையாகவோ— மறைமுகமாகவோ, இச்சிப்பவர், எனக்கு ஆயிரம்பொன் கொடுக்கக் கடமைப்பட்டவர்"........என்று தன் கட்சியை விளக்கிக் கூறி வழக்குத் தொடுத்தாள் அபரஞ்சி!

*　　　　*

அழகி அபரஞ்சியின் கதை சின்னாட்களுக்கு முன்பு திரைப்படமாகக் கூட வெளிவந்தது. அவள் வாழ்க்கை வரலாறு, உண்மையோ அல்லது கற்பனையோ அதுபற்றி நமக்குக் கவலையில்லை......ஆனால் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் இன்று "அபரஞ்சி"யின் நிலையிலுள்ளனர்!

"என்னையா தாசி அபரஞ்சிக்கு ஒப்பிடுகிறீரே — ஒருவேளை — கனிமொழி பேசி, கையிலுள்ள காசுகளை அபகரித்துக்கொண்டு, கந்தைத் துணியோடு வெளியே உலவவைக்கிறார்களே தாசிகள்...அதுபோல...கனிவுடன் கடவுள் பெயரைக் கூறி, நம் கைப்பொருள் இழக்கவைக்கிறார்களே அதற்காக—அபரஞ்சியுடன் ஒப்பிட்டீரோ!'!......என்று நண்பர்கள் கேட்பர்.

உண்மைதான், அவர்கள் வஞ்சக மொழி பேசி, வயிறுவளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை.

"திராவிடர் கழகம், வகுப்புத் துவேஷத்தை வளர்க்கிறது! மக்கள் அவர்கள் பேச்சுக்குச் செவி சாய்க்கின்றனர்! இதனால் எங்களுக்கு இடர் ஏற்படுமோ, என அஞ்சுகிறோம்...... ஆகவே அரசினர் இது விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

—எனக்கூறித் தாங்கள் தொடுக்கும் இந்த வழக்கில், தீவிரக் கவனம் செலுத்தும்படி நம் அரசினருக்கும்— மேலிடத்துக்கும் பார்ப்பனர்கள் சில காலமாக வேண்டுகோள் விட்டவண்ணமே இருக்கின்றனர்!

*　　　　*

அபரஞ்சி தொடுத்த வேடிக்கையான வழக்கைப்போன்றதே இதுவும் என்று நமக்கு எண்ண தோன்றுகிறது.

ஆணழகர்—அபரஞ்சியைக் கனவில் கண்டு சல்லாபித்தார்! ஆகவே அபரஞ்சியின் திட்டப்படி, அவள், ஆணழகர்மீது வழக்குத் தொடுப்பதிலும் ஓரளவுக்குப் பொருளுண்டு!

ஆனால், பார்ப்பனர்களுக்கு இடர் ஏற்படவேண்டுமென்று, கனவில்கூட நினைக்காத—திராவிடர் கழகத்தின் மீது, வழக்குத் தொடுக்கும்படி பார்ப்பனர்கள் மேலிடத்தை வேண்டுவது...கனியைக் கையில் வைத்துக் கொண்டு பாரீர்! இந்தக் கல்லின் வலிமையை...எனக் கூறுவோர் நிலையை

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# குடி அரசு

28—5—49 சனிக்கிழமை.


## வெங்கட்டராமனிஸம்.

—o—

16 மாதங்களுக்கு முன்னால், கொலை வெறியர்கள் கூடிய மத வெறி ஸ்தாபனமான ராஷ்டீரிய சுயம் சேவக்சங்கத்திற்கு, இந்திய யூனியன் நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, "சட்ட விரோதமான ஸ்தாபனம்" என்கிற மரணப் படுகுழியைத் தோண்டினோம் என்று கூறியது. ஆனால் மதவெறி கொல்லப்படவில்லை. கொல்லப்படாத மதவெறிக்குத்தான் புதைகுழி. அந்தப் புதைகுழியும், மதவெறி என்பதினுடைய உடம்பில் எந்த முக்கிய பாகத்தையும் பாதித்து விடக்கூடாது என்கிற கவலையோடும் அக்கரையோடும் தோண்டப்பட்டது என்றுதான் சொல்லப்பட்டது. அதாவது இந்துமகா சபையின் ஒரு உட்பிரிவான சேவா சங்கத்திற்குத்தான் 'சட்டவிரோத ஸ்தாபனம்' என்கிற பெயரேதவிர சேவாசங்கத்திற்குத் தாயும் தந்தையுமாயிருக்கிற இந்து மகா சபைக்கு அப்படி ஒரு பெயரில்லை என்று சொல்லியது.

இப்படி "நோகாமல் அடிக்கிறேன், ஓயாமல் அழு" என்பது போல தடை விதிக்கப்பட்டிருந்தும், இந்தத் தடைபோடப்பட்ட காலத்திலிருந்தே, இந்தத் தடையைத் தவிடுபொடியாக்கவேண்டும் என்று தீர்மானித்துச் சுமார் 15 மாதகாலமாகவே, அதற்கு வேலை செய்துவருகிறது ஆரியம், ஒரு 'பரப்பிர்மத்'தின் ரூபத்தில்.

ஆரியத்தின் மாபெரும் கோட்டை என்று பார்ப்பனர்கள் நினைத்துக்கொண்டிருப்பது இந்து மதம். இந்த இந்துமதத்துக்கு, அது இந்த நாட்டில் புகுத்தப்பட்ட காலத்திலிருந்து, அடிக்கடி ஏற்பட்ட ஒவ்வொரு எதிர்ப்பையும், எப்படி நயவஞ்சகத்தாலும், தந்திரத்தாலும், தளுக்கு வேலைகளாலும் எப்பேர்ப்பட்ட கொலை பாதகங்களைச் செய்து, பிரித்து வைக்கும் முறைகளை மேற்கொண்டு, எதிர்ப்புகளைச் சர்வ நாசப்படுத்தி வந்திருக்கிறது என்பதைச் சரித்திரம் சொல்லும்.

அப்பேர்ப்பட்ட ஆரியம், இந்த விஞ்ஞான காலத்தில், காலத்திற்கேற்றவாறு தன் ஆதிக்கத்தை நிலைக்கச் செய்ய—ஆதிக்கத்தின் அழிவுச் சக்தியை யொடுக்க, தேக பலமிக்க கொலை வெறியர்களை வளர்க்கவேண்டும்; அதுவும் தன்னினத்தவர்களுக்குள்ளாக, என்று திட்டம் போட்டுச் செய்த வேலை தான் இந்து மகாசபையும், அது பெற்றெடுத்த சேவா சங்கமும்.

இந்த உண்மையை மனித நெஞ்சம் படைத்த எவருமே நன்றாக உணர்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையில்தான், காந்தியார் கொலையின் காரணமாக பார்ப்பனீய வெறிக்குப் பெயரளவில் சட்ட பூர்வமாக வந்துவிட்ட தடையை எப்படிப் போக்குவது என்று எண்ணி எண்ணி, 15 மாதக்கூடும் உழைப்புக்குப் பிறகு, தோழர் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார், கொலைகாரக் கும்பலுக்குப் புத்துயிர் என்பதாகச் சில திட்டங்களைக்கூறி, தடையை விலக்கிவிட வேண்டுமென்று பட்டேல் பெருமானை வேண்டியிருக்கிறார். அவர் கூறியிருக்கும் மாற்றுத் திட்டத்தின் சாராம்சமாவது;

புத்துயிர் கொடுக்கப்படும் சேவா சங்கத்தில், 18 வயதுக்கு மேற்பட்ட இந்து ஆண்கள் எல்லாம் அங்கத்தினராகலாமாம். ஆனால் அங்கத்தினர்களுக்குள் 2 வகையுண்டு. ஒரு வகையினர் சாதாரண அங்கத்தினர்; மற்றொரு வகையினர் தீவிர அங்கத்தினர்.

இதற்குக் கொடி, இந்துக்கலாச்சாரத்தின் புராதனச் சின்னமான பக்வா துவஜமாம்.

இச்சங்கத்தின் லட்சியம், இந்து மதத்திற்குள் உள்ள வெவ்வேறு போக்குகள் கொண்ட பல பிரிவுகளையும் ஒன்றுபடுத்தி, (?) இந்து சமுதாயத்தை, அதன் தார்மீக சமஸ்கிருதக் கலாசார அடிப்படையில், அதற்குப் புத்துயிர் அளித்து மீண்டும் தீவிரமானதாகச் செய்வதாம்.

சங்கத்தின் வேலைத் திட்டங்கள், (1) ஒவ்வொரு நாளும் சௌகர்யமான நேரத்தில் பயிற்சிகளுக்கும் விளையாட்டுகளுக்கும் ஏற்பாடு செய்வதின் மூலம் உடற்பயிற்சி அளிப்பது (2) அறிவு வளர்க்கப் பயிற்சி (3) இந்து தர்மம் கலாச்சாரம் ஆகியவற்றில் பற்று ஏற்படச் செய்யப் பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்தல். (4) கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்தல். (5) மேற்கூறிய வேலைத் திட்டங்களுக்காக வேலை செய்ய எங்கும் இதன் ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல்" என்பனவாம்.

இந்திய யூனியன் முழுவதிலும் பரப்பப்பட வேண்டிய இந்த சங்கத்திற்கு மத்திய நிர்வாகக் கமிட்டி என்பது ஒன்றுண்டு; அதற்குப் பெயர் கேந்திரிய கார்ய கரிமண்டல் என்பதாம்.

சங்கத்தின் கொள்கைளை—வேலைத் திட்டங்களை வகுக்கும் ஒரு கும்பலுக்கு அகில பாரதீய பிரதிநிதி சபை என்று பெயராம்.

இந்த ஸ்தாபனத்தின் தலைவருக்குப் பெயர் "ஸார் சங்சலாக்" என்பதாம்.

கிளை ஸ்தாபனத் தலைவர்களுக்குப் பெயர் சங்சலாக் என்பதாம்.

இந்த வெங்கட்டராமனிஸம், காமகோடி பீடத்திலிருந்து போப்பாண்டவர் வரையுள்ள மதஸ்தாபனங்களை மனதிலெண்ணி வகுக்கப்பட்டதாயிருந்தாலும்சரி; இன்றைய அதிகார பீடத்திலுள்ளவர்களின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிறகு இது வெளிப்படுத்தப்பட்டதாயிருந்தாலும்சரி, அல்லது அதிகாரப் பீடம் நாளைக்கு இதை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும்சரி, நம் மக்கள் இதன் உண்மை சொரூபத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

பார்ப்பனர்களும் தமிழர்களே என்று வாய்கூசாது, மனம்கூசாது கூறும் நம் திராவிடத் தோழர்கள் இந்தத் திட்டத்தைச் சற்று எண்ணிப் பார்க்கட்டும்.

பார்ப்பனீயம், வர்ணாச்சிரம தருமப்படி (தார்மீக சமஸ்கிருதக் கலாச்சாரப்படி) மநு அதர்ம ஆட்சியை இந் நாட்டில் நிலை நாட்டிவிட ஒரு பலமான முயற்சியைச் செய்கிறது என்பதை இது விளக்கவில்லையா?

இந்து மதக் காட்டுமிராண்டித் தன்மையை, பல இளைஞர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாவது நிலை நாட்டவேண்டு மென்பதை இது விளக்கவில்லையா? இந்துக்களிலும் ஆடவர்கள் மட்டுமே ஏன் அங்கத்தினராகவேண்டும்?

"இமாலயத்திலுள்ள பார்ப்பானுக்குத் தேள் கொட்டினால், இங்குள்ள கன்யாகுமரிப் பார்ப்பானுக்கு விஷம் ஏறும்" என்கிற நியாயத்தை இது விளக்கவில்லையா?

பார்ப்பனர்கள் வட இந்தியத் தொடர்பிலிருந்து என்றைக்குமே விலகமாட்டார்கள் என்பதையும், திராவிடர்களோடு சேர்ந்து வாழ மனம் ஒப்பார்கள் என்பதையும் இது விளக்கவில்லையா?

மூளைப் பலத்தைமட்டும் நம்பாமல், உடற்பலத்தையும் ஆயுத பலத்தையும் நம்பவேண்டும் என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்கள் பார்ப்பனர்கள் என்பதை இது விளக்கவில்லையா?

எல்லாவற்றுக்கும் மேலாக, 10, 20-வருஷங்களுக்குப் பின்னால் பிறக்கவேண்டிய கோட்ஸேக்கள் இப்பொழுதே பிறந்துவிட்டார்கள்; அது சரியில்லை. முதலில் அதற்கான அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என்பதை இது விளக்கவில்லையா?

இன்னும் யோசியுங்கள்! இந்த வெங்கட்டராமனிஸத்தில் இன்னும் பல புதிர்கள்—ஆனால் உண்மைகள்—மறைந்திருப்பதை நீங்கள் காணமுடியும்.

இப்பேர்ப்பட்ட வெங்கட்டராமர்கள் கூட்டுறவு மக்களால் விரும்பப்படக்கூடியதா?

# சுயராஜ்ஜியத்தில் வேறு சுய ஆட்சி ஏன்?

## சுய ஆட்சியா? இது வரி ஆட்சியா?

### திருவரங்க நகரமன்ற வரவேற்புக்கு பெரியார் பதில்.

★

திருவரங்கம் மே. 24.

இன்று மாலை திருவரங்கம் நகர மன்றத்தின் சார்பில் திராவிடத் தந்தை பெரியாரவர்களுக்கு ஒரு வரவேற்பு வைபவம் பெருஞ் சிறப்புடன் நடைபெற்றது.

நகர மன்றத் துணைத்தலைவர் தோழர் என். ராஜகோபாலன் நகர மன்றத்தின் சார்பில் ஒரு வரவேற்பிதழ் படித்துக்கொடுத்தார்.

பெரியாரவர்கள் வரவேற்புக்குப் பதிலளிக்கையில்,

ஸ்தல ஸ்தாபனங்கள் என்பன அந்தந்த ஸ்தல மக்களைச் சுய ஆட்சிக்குத் தகுதியுடையவர்களாகப் பழக்குவதற்காகவே முன்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்கு மாறாக, நாளடைவில் நகர மன்றங்களுக்கும், நாட்டாண்மைக் கழகங்களுக்கும் உள்ள அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு, இன்று சுயாட்சி என்பது சொல்லளவில்தான் என்று சொல்லப்பட வேண்டிய நிலையில் வந்துவிட்டது. இந்தியா வெள்ளையரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது, ஒவ்வொரு நகரங்களிலும், ஜில்லாக்களிலும் அந்தந்த மக்களுக்குச் சுய ஆட்சிக்கான ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதென்றால், இன்று இந்தியாவுக்கே சுய ஆட்சி கொடுக்கப்பட்டு, நாடு முழுவதுமே சுயராஜ்ஜிய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சுய ஆட்சி என்று கூறி, அதற்கான தனி ஸ்தாபனங்களை நீடித்து வைத்துக் கொண்டிருப்பது என்ன அர்த்தம்? நகர மன்றங்களையும் நாட்டாண்மைக் கழகங்களையும் (ஜில்லா போர்டுகளையும்) ஏன் சர்க்காரே ஏற்றுநடத்தக் கூடாது? மேலும் இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் மக்களுக்குள் கட்சிகளை உண்டுபண்ணுவதற்கும், மனஸ்தாபங்களைப் பெருக்குவதற்குமே காரணமாக இருந்து வருகிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்?

இப்போது நடைபெற்றுவரும் ஸ்தல சுய ஆட்சியைச் சுய ஆட்சி என்று எப்படிச் சொல்ல முடியும்? இது சுய ஆட்சி அல்ல, வரி ஆட்சி தானே இப்போது நடந்து வருகிறது. சுய ஆட்சி என்றால் அந்த ஆட்சி மக்களிடமிருந்து வரி வசூல் செய்யலாமா? வரி வசூல் இல்லாமலே நகர மன்றங்கள் நடக்க வழியிருக்கிறதென்றால் அந்த வழியை நகர மன்றங்கள் ஏன் பின்பற்றக்கூடாது? ஒவ்வொரு நகரங்களிலும் உள்ள சினிமாக்கொட்டகைகள், காபிஹோட்டல்கள், கடைகள், பஸ் சர்வீஸ்கள் முதலிய தொழில்களையெல்லாம் நகரமன்றத்தினரே ஏற்று நடத்தினால், இன்று தனி மனிதன் அடைந்துவரும் வருமானம் நகர மன்றத்தினருக்குக் கிடைத்துவிடுமே. அந்த வருமானத்தைக் கொண்டு எவ்வளவோ சிறப்பாக நகர மன்றங்களை நடத்த முடியுமே.

நிற்க, இந்தமுறையைத்தான் எப்படி ஒரு பிரமாதம் என்று கூறிவிட முடியும்? இப்போது சில தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச்சங்கங்களை இன்னும் விஸ்தரித்து, நகரத்திலுள்ள எல்லாத் தொழில்களையும் கூட்டுறவுச் சங்கங்களே மேற்கொள்ள என்று சட்டம் செய்வதோ அதை அமுலாக்குவதோ எப்படிப் பிரமாதமாகிவிடும்? என்கிற கருத்தப்பட பேசி முடித்தார்கள். தோழர் கே. கே. சீனிவாசன் நன்றி கூறப் பின் விழா இனிது முடிந்தது.

திராவிட கழகத் தலைவர், திருவாளர்

# பெரியார், ஈ. வெ. இராமசாமி அவர்கட்கு

திருவரங்கம், நகராண்மைக் கழகத்தார் அளித்த

## வரவேற்பு.

அறிவுள் அறிவே! ஆண்மையின் உருவே!
இணையிலாத் தலைவ! ஈரோட்டுப் பெரியோய்
உறுதி சால் மனத்தோய்!
வருக! வருக! நுங்கள் வரவு நல்வரவாகுக! வாழி!
வையம் போற்றும் அய்யன் காந்தியின், அருமைத் தோழ!
வருக! வருக! வணக்கம்!

✩

கருங்கடல் சிக்கிய அருங்கலம், கரைசேர் வழிசெய் மீகாமன்,
அருஞ்செயல் போன்று; அருஞ்செயல் புரியும் பெரியீர்! வருக!
ஆம்!
"செயற்கரிய செய்வர் பெரியர்"
அதனால்,
பெரியார்! பெரியார்!! வாழ்க!
அறிவை மெருகிடும் அற்புதக்கருவியாம் 'இராமசாமிப்' பெரியோய்!
நுங்கள் வரவால் யாங்கள் அகமகிழ்ந்தோம்! அறிவுரை தந்து அருள்க!

★

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற,
சிறப்புடை 'வள்ளுவன்' சிறந்த கருத்தை,
நாட்டிடைக் காண நாளும் நாளும்,
ஓயாது உழைக்கும் உரவோய்! வாழி!
ஈரோட்டு; முன்னாள், நகராண்மைக் கழகத்தலைவ! அந்நகர்க்கு
அந்நாளில் நீ ஆற்றிய அரும்பணியைப் போற்றாதார் யார்!
என்னே நின் பணி! என்னே நின் திறன்!

✩

வாழ்க! நின் தொண்டு! வளர்க! நின் வாழ்நாள்! வாழி! வாழி!

திருவரங்கம்
24—5—49

வணக்கம்.

இங்ஙனம்,
நகராண்மைக்கழகத்தார்.

---

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்: நெடுஞ்சேரலாதன்.

'செப்டசயின்ட்'டின் ஒரு உண்மைப் பிரதி நம்மிடமுள்ளதா?

ஒருவருக்குந் தெரியாதே!

யூத ஈப்ரு மொழியிலுள்ள நம் விவிலிய நூலின்பழமையான சுவடி என்ன இருக்கிறது?

நம்முடைய ஈப்ரு மொழியிலுள்ள பழமையான சுவடி கி. பி. 10ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். மிகப் பழமையானது எனப் பாவனை செய்து கூறப்படும் 'செப்டுசுயின்ட்' கிரேக்க மொழியில் கி. பி. 5ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும்.

விவிலிய நூல் தெய்வீக வேத வாக்கானால்-உண்மையான கடவுளின்வார்த்தையானால் நமக்கு எவ்வித அத்தாட்சிப் பிரதிகளும் கிடையாது. உண்மைப்பிரதி தொலைந்து போய் நாம் இயற்கையின் இருளிலே தள்ளப்பட்டுள்ளோம்.

விவிலிய நூல் தவறற்றது என்று நம்மால் நிரூபிக்க முடியாது. நமக்கு எவ்வித நிர்ணயிப்பும் இல்லை. விவிலிய நூலிலுள்ள பல புத்தகங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகிறது. பல அத்தியாயங்கள் முடியாமலே விடப்பட்டிருக்கிறது. பல புத்தகங்களின் பகுதிகள் ஒரேவிதக் கருத்துடன், ஒரே சொற்களால் எழுதப்பட்டிருக்கிறது. இது இரண்டும் உண்மையான முதல் பிரதிகளல்ல என்பதைக் காட்டுகின்றன. 2ம் 'கிங்ஸ்' இன், 19வது 20வது அதிகாரங்களும், இசய்யாவின் 37வது 38வது அதிகாரங்களும் ஒன்று போலவே இருக்கின்றது. இசய்யாவின் 36வது அதிகாரம் 2ம் வரியினின்று மேலேயுள்ளவையும் 2ம் கிங்ஸ் இன் 18வது அதிகாரம் 2ம் வரியினின்று மேல் இருப்பவை யாவும் ஒன்றுபோலவேயுள்ளது.

இதினின்றும் தெட்டெனத் தெளிவது யாதெனின், உண்மையான ஒரு அதிகாரி இருந்து கிங்ஸ் எழுதியவருக்கும், கிரானிகல் எழுதியவருக்கும் கருத்துக் கூறியிருக்க முடியாது என்பதே! இரு புத்தகங்களும் ஒன்று போல்வனவே; ஆயினும் ஒரு சில குற்றங்களிலும், பொய்மையிலும் தான் மாற்றங் காண்கிறது. ஒளியிலும், எண்ணிலும், அப்படியேதான். உண்மைக்கும், தத்துவத்திற்கும் இந்தப் புத்தகங்கள் ஒத்துப் போவதில்லை; எழுதியவர்கள் போலவே எழுதப்பட்டவையும் வேறு பட்டு இருக்கிறது.

உலகாயுதம் யாது செய்துள்ளது?

உலகாயுத மக்கள் இயற்கை உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். உலகத்தின் சகல சக்திகளையும் உபயோகப்படுத்த—நீர் வீழ்ச்சியின் கனத்தையும், சுற்றும் காற்றை உபயோகப்படுத்தவும், கண்டு பிடித்தார்கள். அவர்கள் நீரை நீராவியாகவும், யந்திரங்களையும், ஓய்வற்ற பூதங்களையும் கண்டுபிடித்து மக்களுக்காகப் பயன் படுத்தினார்கள். அவர்கள் ஒளியைத்தூதுவராகவும், அடிமையாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் ஊர்வனவும், அச்சகக்கலையும், இவைகளைப்பயன்படுத்தும் வழிகளையும் கற்பித்து, அறிவுச் செல்வத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் முறைகளையும் கண்டு பிடித்தார்கள். அவர்கள் உலகக்கண்டங்களைக் கம்பிகளால் நிரப்பி, நாடுகளையும், நகரங்களையும் தொலை உச்சரிப்பெழுத்தால் (தந்தி) சேர்த்து, உலகையே ஒரு குடும்பமாக்கி, அறிஞர்களை தொலைத்தோழர்களோடு நம்பிக்கை கொள்ளும் வகையான முறைகளை அமைத்தனர். அவர்கள் வீடுகட்டவும், உணவு சேகரிக்கவும், துணி நெய்யவும் கற்பித்தார்கள். அவர்கள் கடலை இரும்புக் கப்பல்களாலும், தெருக்களை எஃகுக் கம்பிகளாலும் நிரப்பிவிட்டார்கள். (தொடரும்)

[7ம் பக்கத் தொடர்ச்சி]

நினைப்பூட்டுகிறது.

* *

அபரஞ்சி அழகிதான் என்றாலும் ஒரு தாசிக்கு இருக்கும் அழகு எதற்குப் பயன்படுகிறதோ அதுபோலவே பார்ப்பனரில் பலர், அறிவாளிகளாக இருந்தபோதிலும்...அவர்கள் அறிவு மக்களை எத்திப் பிழைக்கப் பயன்படுகிறது!

இப்பாழ் நிலையிலிருந்து, பார்ப்பனரை மீட்டு அவர்தம் சூது மதிக்கு இலக்காகும் மக்களை மனிதத் தன்மைக்கு இழுத்துச் செல்கிறது திராவிடர் கழகம்!

"அழகு-எனக்குக் கேடயம்! அன்பு மொழி—எனக்குக் கூர்வாள்! பண மூட்டைகள்-என் பாதுகாவலர்!" என்று அபரஞ்சி கூறிப் பூரித்ததைப் போல...

"மநுதர்மம்—எமக்குக் கேடயம்! தர்ப்பை—எமது கூர் வாள்! பாராளு மன்றத்தார்—எமக்குப் பாதுகாவலர்!" எனக் கூறி பார்ப்பனர் இதுகாலவரை சுரண்டினர்!

* *

தாசியின் அழகுக்கும்—அன்புப் பேச்சுக்கும் ஒரு எல்லைக்கோடு இருப்பதுபோல...பார்ப்பனரின் சுரண்டலுக்கும் ஒரு எல்லைக்கோடு உண்டு!

அந்த எல்லைக்கோட்டை வகுத்தவர் தான் திராவிடர் கழகத்தார்.

"போதும்! உங்கள் பாதகச் செயல். உலகின் பல பகுதியை நோக்குங்கள்! ஆங்காங்கே வதியும் மக்கள் வாழ்க்கையையும் காணுங்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய வீடும் ஒரு புன்னகைப்பூந்தோட்டம்...! அந்த அளவிலே நம் நாட்டைத் திருத்த முற்படாது—மக்களின் மூடமதியை முதலாக வைத்து ஏன்வாழ்வு வாழ்கிறீர்!

சூதுத்தன்மை—நெடுநாள் நிலைக்காது! சுரண்டல் திட்டம் பல நாள் பிழைக்கும் குழந்தை அல்ல!

உலகை ஒரு குடையின் கீழ் ஆள எண்ணினானே "ஹிட்லர்"...அந்த ஹிட்லர் எங்கே இப்பொழுது!

மக்கள் எனக்கு மண்டியிட்டுக்கிடப்பவர்—மதகுருக்கள் என் ஏவலர்!... என்று கூறினானே "ஜார்" அவன் எங்கே இப்பொழுது!

அழிந்து விட்டானா?

அப்படியானால்!-ஏன் அழிந்தான்-எப்படி அழிக்கப்பட்டான்!

சரிதம் கூறுகிறது அவன் வாழ்வைப்பற்றி...சர்வாதிகாரம் செய்தான் சரிந்தது அவன் மனக்கோட்டை... என்று!

"ஆகவே எனதருமைப் பார்ப்பனத் தோழர்களே...நீங்கள் சமூகத்தின் மீது...செலுத்தும் சர்வாதிகாரம் செல்லாது! உங்கள் சுரண்டல் திட்டம் எனும் எட்டுக்கு இத்துடன் முடிவுரை எழுதி முடித்துக் கொள்ளுங்கள்!"

...என அறிவுரை வழங்கினோம், பார்ப்பனரின் ஆரியத்தன்மையை கண்டித்து!

நாம் மட்டும் ஆரியத்தன்மையை கண்டிக்கவில்லை! மேல் நாட்டு அறிஞர்களும் இதே கருத்தைக் கொண்டிருக்கின்றனர் என்பதை விளக்க; "ரீடர்ஸ்டைஜஸ்ட்" என்ற ஆங்கில ஏட்டில், தோழர் 'அலபென்பல்' (ALAFENPUL) எழுதிய கட்டுரையின் வாயிலாக அறியலாம்!

"நாஜிய ஜெர்மனியின் வீழ்ச்சியுடன் உலகத்தை ஏமாற்றி வந்த இன உயர் வென்ற கட்டுக்கதையும் முடிவடைந்தது. 'தனி ஆரியன்' என்ற—ஆணவத்திற்கு இனிச்சமூகத்தில் இடமில்லை. ஆனால் அந்த இன உயர்வுப் பூதம் நம்மிடை நடமாடவிட்டதற்கு, இன உறவு விஷயத்தில் நாம் அனைவரும் கொண்டுள்ள தவறான கொள்கையும்—அறியாமையுமே காரணமாகிறது. வளர்ச்சியிலும், அதற்குத் தேவையான சந்தர்ப்பத்திலும் நமக்குள்ள வேற்றுமைதான் இனத்திற்கு இனம் நாம் மிகைப்படுத்திக் காணும் வேற்றுமைக்குக் காரணம்! உயர்ந்த இனம் என்று ஒன்று தனிப்படஇல்லை; ஆனால் உயர்ந்த மனிதர்களிருக்கிறார்கள். அவ்வுயர்ந்தோர் எல்லா இனத்திலுமுள்ளனர்."

...இதோடு 'அலபென்பல்' விட்டுவிடவில்லை! உயர்ந்தோர் என்போர் எப்படி இருப்பர் என்பதை விளக்க...

"அறிவு, கற்பனாசக்தி, ஊக்கம், உணர்ச்சி, நிதானம், இவற்றில் மிக உயர்ந்தோரைத் தெரிந்தெடுப்பதாக வைத்துக் கொண்டால், அப்படித் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் உலகிலுள்ள எல்லா இனத்தவரும் இருப்பர்."

...என்ற மானிடதத்துவ நிபுணரான 'பிரான்ஸ்போஸ்' (FRANCE-BOSE) என்பவரின் கருத்துரையிலிருந்து எடுத்துக்காட்டுகிறார்.

...ஆகவே, பேரறிஞர்களின் கண்டனத்துக்குள்ளாகிறது ஆரியம்!

* *

நிலைமை இவ்வளவு விளக்கமாகவும், தெளிவாகவும் இருக்க...பார்ப்பனர்கள்..., ஆரியத்தன்மையை ஒழிக்க முயலும் திராவிடர்களைத் தூற்றுகிறார்கள்.

* *

"யாருக்காவது அதிகக்கூர்மையான புத்தி இருந்து அவன் மகாகெட்டிக்காரனாகவும் இருந்து விட்டால், உலகம் அவனை உடனே பைத்தியம் என்று முடிவுகட்டத்தயாராக இருக்கிறது. ஒருவன் மட்டும் மிகவும் புத்திசாலியாக இருப்பது பலருக்குப் பொறாமையையும், எரிச்சலையும் கிளப்பிவிடுகிறது தங்களுக்குத் தெரியாத பல உண்மைகளை ஒருவன் சொல்லக்கேட்பதைக் காட்டிலும் அவனைப் பைத்தியம் என்று சொல்லி விடுவது மிகவும் சுலபமான விஷயம்"

...என்று, மராட்டிய எழுத்தாளர் என். சி. பட்கே, கூறுவதுபோல பார்ப்பனர்கள், அறிவு பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள திராவிடர் கழகத்தாரை "பைத்தியக்காரர்கள்" கூட்டம் என முடிவுகட்டி...மக்களிடமும் தம் முடிவை சில காலமாக விளக்கிக் கூறிவருகின்றனர்.

மக்களிலே ஒரு சிலர் அவர்கள் பேச்சுக்கு செவிமடுத்தாலும்; மற்றமுள்ள சிலர்,..."ஏனையா, தென்றல் காற்றை வேண்டா மென்பாருண்டோ! திராவிடர்கழகத்தார் நாட்டிலே ஆற்றிடும் பணி, தென்றல் போன்று இனிமை பயப்பதாகத்தானே இருக்கிறது!... அதை ஏன் நீங்கள் வெறுக்கின்றீர்கள்...அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதுதானே"

...என்று பார்ப்பனர்களைப்பார்த்து இப்பொழுது தான் கேட்க ஆரம்பித்திருக்கின்றனர்.

மக்களின் ஒரு சாரார் கூறுவது போல திராவிடர் கழகம் ஆற்றிடும் பணி, தென்றல் போன்று இனிமை பயப்பதுதான்!

...என்றாலும் தென்றலும் ஒரு சிலருக்கு வெறுப்பைத் தருகிறதல்லவா!

தலைவனைப் பிரிந்த தலைவி சோலையில் இருக்கும் போது...தென்றல் வீசினால் அவளுக்கு—இன்பமா ஏற்படும்...இன்னலன்றோ ஏற்படும்!

இது போலவே "சுரண்டல் தன்மை" என்னும் தங்கள் தலைவன் பிரிவதால்தலைவனற்ற தலைவி சோலையில் வாடுவது போல்...வாடி வருந்துகின்றனர். பார்ப்பனர்கள், திராவிடத் தென்றல் அவர்கள் மேல் வீசும்போது!

தென்றலை எத்தனை நாளைக்குத் தான் வெறுத்தொதுக்குவது!

என்றாவது ஒரு நாள் வரவேற்றுத் தானே தீரவேண்டும்...அவர்கள் வரவேற்காவிட்டாலும் வரவேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டே தீரும்.

சூழ்நிலை ஏற்படாவிட்டாலும் இது பற்றிய பேச்சாவது இப்பொழுது எழுந்துள்ளது!

"மக்களினம் விரும்பும் பரந்தநிலம், பண்பு, மரபு ஆகிய அனைத்தையும் நம்நாடு பெற்றிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு குணத்தை மட்டும் நாம் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவர் நலத்தைக் கண்டு மற்றவர் மகிழ்வதும் ஒருவரோடு மற்றொருவர் சேர்ந்து உழைப்பதுமாகிய பண்புதான் அது. அந்தப் பண்பைப் பெறுவோமானால் உலகத்திலுள்ள மற்றைய நாடுகளுடன் நாம் இடம் பெறுவதற்கு முழு நம்பிக்கையுடைய

வர்களாவோம்''

...என்று இந்தியாவின்...ஹை கமிஷனர் தோழர் வி. கே. கிருஷ்ண மேனன் பர்மிங்ஹாமிலுள்ள இந்தியர் சங்கத்தில் இம்மாதத் துவக்கநாளன்று பேசும்போது குறிப்பிட்டார்.

"எனதருமைப் பார்ப்பனத் தோழர்களே, உங்கள் உயர்ஜாதி ஆணவத்தை விடுத்து எங்களுடன் சேர்ந்து உழையுங்கள்'' என அன்பழைப்பு விடுத்தோம் அவர்களுக்கு, பலவித ஏசற்சொற்களையும் ஏற்றுக்கொண்டு.

நாம் கூறிய கருத்தைப் போன்றே இல்லாவிட்டாலும், மக்களினம் மக்களினத்தோடு ஒத்துப் பணி புரிந்தால் தான், நாடு மீள வழியுண்டு என்ற பொருளில் பர்மிங்ஹாமில் தோழர் மேனன் பிரமாத வரவேற்புக்கிடையே பேசியுள்ளார்.

அவருக்கு வரவேற்பு!

நமக்கு வசைச்சொல்...

என்ற எண்ணத்தை மனதில் கொண்டு குறைபட்டுக்கொள்ளா விட்டாலும்...உயர்ந்த பதவியிலுள்ளோரால் நம் கருத்து வரவேற்றுப் பேசப்படுகிறது என்பதை எண்ணிப் பூரிக்கிறோம்!

ஆகவே! சுரண்டல் கோட்டையிலே திராவிடத்தென்றல் வீசும் சூழ்நிலை ஏற்படாவிட்டாலும் இதுபற்றிப் பேசும் நிலை அதாவது தென்றல் வீசவேண்டுமென்ற பேச்சுக் கிளம்பி விட்டது!

இந்த நல்ல சந்தர்ப்பத்தை நம் நாட்டுப் பார்ப்பனர்கள் கைவிட்டுவிடக் கூடாது.

திராவிடர்களுடன் ஒத்துழைக்க முன்வரவேண்டும்!

இல்லையேல் "வாயிலினூடே வறுமை வந்தால்—ஜன்னல் வழியே அன்பு பறக்கும்'' என்ற மேலை நாட்டுப் பழமொழியை மனதில் கொண்டு...புள்ளிமானுக்கும்—வேடனின் அம்புக்குமுள்ள சம்பந்தம் நமக்கும், பார்ப்பனர்களுக்கும் ஏற்பட்டு விடுமோ என அஞ்சுகிறோம்.

—"தங்கவேலர்''

## கவனிக்க.

பாக்கிப் பணம் அனுப்பாத சில ஏஜண்டுகளுக்கு இவ்வாரம் பத்திரிகை நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மாத பில்லுக்கு அய்ந்து நாட்களுக்குள் பணம் அனுப்பாத முன்பாக்கியுள்ள ஏஜண்டுகளுக்கு, அடுத்த வாரம் பத்திரிகை எவ்விதமுன்னறிவிப்புமின்றி நிறுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்.

(6ம் பக்கத்தொடர்ச்சி)

இன்றைய முக்கியப் பொதுப் பணியாகும்.

அதிலே நாம் கவலை செலுத்தாமல், பதவி—பட்டம் ஓட்டுகளில் மட்டும் பாடுபடுவது மானரோஷமுள்ள காரியமாகுமா?

### சமுதாயமும் அரசியலும் வெவ்வேறல்ல.

சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று கூறுவதும் தவறாகும். சமுதாய அமைப்பைச் சரிவர நடத்துவது தானே அரசாங்கத்தின் கடமையாகும். சமுதாய அமைப்புக்கு வழிவகை அமைப்பதே மதத்தின் தத்துவமாகும். முஸ்லீம்களும், கிருஸ்துவர்களும் தங்களதுமதத்தை அவ்விதமே கையாண்டுவருகின்றனர். ஆனால்நமது மதமிருக்கிறதே அது நமது சமுதாய அமைப்பின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. நம் அரசாங்கம் என்பதோ மக்களுக்காக அல்லாமல், அரசாங்கத்தாருக்காக மக்கள் வாழவேண்டிய தலைகீழ்த் தத்துவத்தில் நாம் உழன்று வருகிறோம்.

எனவே நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால் சமுதாயத் துறையிலே பெரும் மாறுதலை உண்டாக்க வேண்டும். அதன் பின்னரே நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும். அவ்வாறில்லாது இன்றையச் சமுதாய அமைப்பைக் கொண்டே, யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒரு சிறிதும் நீங்குவதற்கு வழிவகையிருக்க முடியாது.

### வாலிபர் பங்கு.

இவ்விதச் சமுதாயப் புரட்சியை உண்டாக்குவதில் தீவிரப்பங்கு கொள்ள வேண்டியவர்கள் வாலிபர்களேயாகும். அவ்விதத் தன்மையில் பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தார் மேலும் தங்களது தொண்டினை ஆற்ற வேண்டும். அதற்கு இங்குள்ள தொழிலாளர்கள் பெரிதும் ஆதரவு தரவேண்டும். கம்யூனிஸ்டுகளும், சோஷியலிஸ்டுகளும் மறைமுகமாகப் பார்ப்பனீயத்துக்கு ஆதரவு தரும் சூழ்ச்சியைவிட்டொழிக்கவேண்டும். கழகக்கொள்கைக்கிணங்க அதாவது பார்ப்பனீயத்தை, மூடப் பழக்க வழக்கங்களை தொழிலாளரிடையேயிருந்து அகற்றுதல் என்பதை விட்டுவிட்டு, வேறு என்ன தான் தலைகீழாக நின்றாலும் அவர்களுக்கு நிரந்தர உரிமை ஏற்படாது. வேண்டுமானால் தொழிலாளர் பேரால் சுயநல வேட்டையும் அல்லது தங்கள் தங்களது அரசியல் ஆதிக்க வேட்கையையும் பூர்த்தி செய்து கொள்ள முடியுமே யல்லாது பயன் ஒன்றும் காண முடியாது. இதை இனியாவது கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும், தீவிர வாதிகள் எனப்படுவோரும் உணர வேண்டும்.

### எச்சரிக்கை!

தொழிலாளரும் இவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அரசியல் கட்சிக்காரர்களுக்குத் தொழிலாளர்கள் தங்கள்சக்தியை வீணாக்குவதிலும், குறிப்பாகதேசியத்தின்பேரால் ஏமாறுவதிலும் நீங்கள் உஷாராயிருக்க வேண்டும். இல்லையேல் தொழிலாளத் தோழர்களே! எதிர்காலத்தில் மேலும் மேலும் நீங்கள் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடும்.

தவிர, இனிப் பொதுத் தொண்டில் கூட நமக்குள் கட்சிப் பிரதிகட்சி, வீண் எதிர்ப்புகள் இருத்தல் கூடாது. சகோதரத்துவ முறையிலேயே தொண்டாற்ற வேண்டும். என்னைக் கேட்டால் ஒரே மேடையில் ஒரு ராமாயணக்காரரும், ஒரு பெரிய புராணக்காரரும், காங்கரஸ்காரரும், நாமும் கலந்து பேசவேண்டும். பார்ப்பனரும் நம் மேடையில் பேசவேண்டும். அவரவர்கள் கருத்தை எடுத்துக் கூற வேண்டும். மக்கள் அதைக் கேட்க வேண்டும். சிந்தித்து அவரவர்களின் முடிவுக்குச் செயலாற்ற வேண்டும். அந்த அளவுக்கு மக்களிடத்திலே மனமாறுதல் ஏற்பட வேண்டுமென்பதே எனது எண்ணம்.

### நாம் வழிகாட்டுவோம்

நம்மை வேண்டுமானால், காங்கரஸ்காரரோ, மதவாதிகளோ அவர்கள் மேடையில் அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் நாம் அதற்கு வழி காட்ட வேண்டும். ஏனென்றால் நம்மிடம் ஒன்றும் ஒளிவுமறைவு கிடையாது. அரசியல் லாபத்துக்காக இயக்கத்தை நடத்துபவர்களல்லநாம். எனவே, தோழர்களே! எதிர்காலத்தில் நமக்குப்பொறுப்பு அதிகமிருப்பதால், திராவிடர் அனைவரும் ஒன்றுபட்டு வாழவும், உழைப்பாளிகளுக்கு உள்ளபடியே உரிமை ஏற்படவும் பாடுபட வாலிபர்கள் முன்வரவேண்டும். பார்ப்பனத் தோழர்களும் கால நிலையை அறிந்து, மனமாற்றம் அடைந்து திராவிடநாட்டின் நலனுக்காக ஆவன செய்யவேண்டுகிறேன். அதுவே திராவிடர் இயக்கத்தின் கொள்கையாகும். இனிப் பொதுத் தொண்டில் மக்களிடையே ஒரு சிறிதும் துவேஷ உணர்ச்சி கூடாது. கனம் ஆச்சாரியாரும் நானும் சந்தித்த வாய்ப்பு இதற்கு வழிகாட்டியாகவும், அனுகூலமாகவும் இருக்குமென்பதே எனது எண்ணமாகும் என்றும், மற்றும் தற்கால நிலையைப்பற்றியும் பேசிமுடித்தார்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

உடனடியாக ஏற்படுத்துவதற்குத்தீவிரமாக முயற்சிக்கும் நமது கூட்டுத்தோழர்கள் ஒரு விஷயத்தை நன்றாகச் சிந்தித்து பார்க்கவேண்டும். குறிப்பாக நமது ஆந்திர தோழர்களை எடுத்துக் கொள்வோம்; அவர்கள் கருதிக் கொண்டிருப்பதுபோல் ஆந்திரர்கள் முன்னேற்றமடையாது இருப்பதற்குக் காரணம் அவர்கள் சென்னை மாகாணம் என்ற ஒரே அமைப்பின் கீழ் இருப்பதுதானா? என்று ஒரு கேள்வியை எழுப்பினால் இல்லை என்றுதான் நாம் விடையளிக்கமுடியும்— உண்மையான காரணம் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருப்பதுதான். மொழிவாரி மாகாணப் பிரிவினை ஏற்பட்டுவிட்டால்மட்டும் ஆந்திரமோ, பிற வட்டாரங்களோ முன்னேறிவிட முடியும் என்று எப்படி உறுதி கூறிவிட முடியும்? வடநாட்டிற்கு அடிமைப்பட்டுள்ள ஒரு தனி மாகாணமாய் இருப்பதைவிடத் திராவிடக் குடியரசில் அங்கம் வகிக்கும் ஒரு சுதந்தரநாடாக இருப்பதே சிறந்தது—முன்னேற்றத்திற்கு உரிய வழி என்பதை ஆந்திரர்களும் ஏனைய வட்டாரத் தோழர்களும் உணரவேண்டும். இவர்களும் தங்களின் கோரிக்கையைத் "திராவிட நாடு திராவிடருக்கே" என்று மாற்றிக் கொள்ளவேண்டும். மாற்றினால்தான் வாழ வழி பிறக்கும்.

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டியது அவசியமும் அவசரமுமானதுமான பிரச்னை என்று ஆர். கே. ஷண்முகம் முதல் அனைவருமே கூறுகிறார்கள். இம்மாதிரி பிரிக்கப்பட்டால்தான் அந்தந்த வட்டாரங்கள் தங்களுடைய தாய் மொழியில் ஆட்சி நடத்தி முன்னேற முடியுமென்று கூறுகிறார்கள். ஓரளவு இது நியாயமான வாதம்தான் என்று ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் இப்படிப் பிரிக்கப்படும் மாகாணங்கள் தனித் தனியாகவேதான் இருக்கவேண்டுமா வென்று பார்த்தால், நம்மை-திராவிடர்களைப் பொறுத்தவரையில் அப்படியிருப்பது அவசியமில்லை. சென்னை மாகாணத்தில் முக்கிய மொழிகளாகிய தமிழ், ஆந்திரம், மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய தென்றும், தமிழை அடுத்துள்ள மூன்று மொழிகளும் தமிழினின்றும் தோன்றியவைகள் என்றும், மொழியாராய்ச்சிவல்லுனர்களும், மேற்கண்ட நான்கு மொழிகளைப் பேசும் மக்கள் திராவிடர்கள் என்றும், இவர்களுடைய நாகரிகம்,பண்பாடு,கலை யாவும் ஒன்றுபட்டனவும்—மிகப் பழமையானதுமாகும் என்று சரித்திரக்காரர்களும் வரையறுத்து முடிவு கூறியிருக்கும் பொழுது, இந்த நான்கு வட்டாரத்தினரும் வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரிந்து தங்களுக்குள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக்கொண்டு சுதந்தர மக்களாக வாழ்வது சாத்தியமற்றது என்று யாரும் எந்தக் காரணத்தைக் காட்டியும் மறுக்கமுடியாது. இந்த ஒற்றுமை உணர்ச்சியுடன்தான் "திராவிட நாடு திராவிடருக்கே" உரிமையுடைய தாக்கப்படவேண்டும் என்று கேட்கிறோம். இதை நமது கூட்டுத் தோழர்கள் உணரும் காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

### சமஷ்டியின் அதிகாரம்:

சமஷ்டி அரசியல் அமைப்பில் இருக்கும் ஒரு சிக்கலான பிரச்னை அதிகாரங்களை வரையறுப்பதுதான். சர்க்காரின் அதிகாரத்திலுள்ள விஷயங்களை எவ்வளவு நுணுக்கமாகப் பரிசீலனை செய்து, இவை சமஷ்டி சர்க்காருக்கு என்றும், இவை மாகாண சர்க்கார்களுக்கு என்றும் வரையறுத்து முடிவுகட்டி வைத்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் ஜாபிதாவில் இல்லாத அதிகாரம் ஏதாவது தோன்றிவிடக் கூடும். இப்படி ஏற்படுபவைகளை "மிச்ச அதிகாரம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தை யார் நிர்வகிப்பது? மாகாண சர்க்காரா அல்லது மத்திய சர்க்காரா என்ற சர்ச்சை எழும். இம்மாதிரி ஏற்படும் மிச்ச அதிகாரங்களை ஒன்று மத்திய சர்க்கார் அல்லது மாகாண சர்க்கார்தான் நிர்வகிப்பது என்று முடிவுகட்டி விடுவார்கள். உதாரணமாக இந்த மிச்ச அதிகாரத்தை ஆஸ்திரேலியாவில் மாகாண சர்க்கார்களிடத்திலேயும், கானடாவில் மத்திய அரசாங்கத்திடமும் ஒப்படைத்திருக்கிறார்கள்.

தற்போது ஆஸ்திரேலியாவிலும் கானடாவிலும்உள்ளவைகள் சமஷ்டிய சர்க்கார்தான். ஆனால் கானடாவில் மத்திய மாகாண சர்க்கார்களுடைய அதிகாரங்களை வரையறுத்து எல்லை கட்டியிருந்தபோதிலும், மிச்ச அதிகாரங்களை மாகாண அரசாங்கத்திடம் விட்டிருக்கிறார்கள். அங்கு சமஷ்டியின் உறுப்புக்களாக உள்ள பகுதிகளை நாடுகள் என்று வழங்காமல், ஒருமை சர்க்காரில் உள்ளவை போன்று மாகாணங்கள் என்றே கூறுகிறார்கள். இந்த மாகாணங்களின் கவர்னர்களை சமஷ்டி அரசாங்கமே நியமிக்கிறது. இங்கு மாகாண சர்க்காரின் சட்டங்களை ரத்துசெய்ய சமஷ்டிக்கு உரிமையுண்டு. இம்மாதிரி அதிக அதிகாரங்களையுடைய மத்திய சர்க்காரை அமைத்துக்கொண்டிருக்கும் கானடாவின் அரசியலைப் பூர்ண சமஷ்டி என்று கூறமுடியாது. இம்மாதிரி வலிமையுடைய மத்திய சர்க்காரை அமைத்துக் கொண்டிருப்பதின் காரணம் உள்நாட்டுக் கலகங்களையும் குழப்பங்களையும் தடுப்பதுதான்.

ஆனால், ஆஸ்திரேலியாவில் "ஸ்டேட்" (மாகாண) சர்க்கார்கள் தான் பூர்ண உரிமையுடையதாக உள்ளன. இங்கு கவர்னர்களை ஸ்டேட் சர்க்கார்களே நியமிக்கின்றன. இங்கு ஸ்டேட் சர்க்கார்களின் சட்டங்களில் தலையிட சமஷ்டி சர்க்காருக்கு உரிமையில்லை. இந்த இரண்டு சமஷ்டி முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆஸ்திரேலியாவின் சமஷ்டி முறைதான் நமக்கு ஏற்றதாகவும்—ஜனநாயகமுடையதாகவும் தெரிகிறது. ஆஸ்திரேலிய அரசியல் முறையைப்போல் முழு உரிமைகளையுள்ள நாடுகளை உடைய சமஷ்டி முறையைத்தான் ஏற்படுத்த வேண்டும் என்பது திராவிடக் கழகத்தின் கருத்து. நமது கருத்தைத் தெளிவாக உணர்ந்திருந்தால் ஆந்திர, மலையாள, கர்னாடகத் தோழர்கள் நம்முடன் சேர்ந்து, விடுதலை போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் இருக்க நியாயமில்லை.

உதாரணமாக சமஷ்டி சர்க்காருக்கு இருக்கவேண்டிய முக்கிய அதிகாரங்கள் என்னவென்பதைக் கவனிப்போம். (1) வெளிநாட்டு உறவு (2) பாதுகாப்பு (கடற்படை, விமானப் படை) (3) நாணயம், நோட்டு வெளியிடுதல் (4) இறக்குமதி, ஏற்றுமதி வரி விதித்தல் (5) போக்கு வரத்து (விமானம், ரயில், கப்பல், தந்தி, தபால் முதலியன) போன்றது. நான்கு நாடுகளும் பொதுவாக நிர்வகித்தால்தான் நாட்டு நலத்திற்கு உகந்தது என்று கருதப்படும் அதிகாரங்கள்தான் சமஷ்டி சர்க்காரிடம் இருக்கும். ஏனெனில் சமஷ்டியில் அங்கம் வகிக்கும் நாடுகள் மேற்கண்ட பாதுகாப்பு, நாணயச்செலவாணி, வெளிநாட்டு உறவு போன்ற விஷயங்களில் தனித்தனியாகத் தலையிடுவது முடியாததும், பயனற்றதுமாகும். இத்துடன் சமஷ்டி அரசாங்க நிர்வாக செலவினங்களுக்காகச் சில பொது வரி விதிப்புகளைச் சமஷ்டிக்கு விட்டுக்கொடுக்கவேண்டியிருக்கும்.

"உள்நாட்டு விவகாரங்களைக் கவனிப்பதில் இந்த நான்கு பகுதிகளும் தனித்தனி யூனிட்டுகளாக இருந்து கொள்ளலாம். பொதுவான விஷயங்களில் அதாவது கப்பம், போக்குவரத்து, பாதுகாப்புப் போன்றவைகளைக் கவனிப்பதற்குத் தங்களுக்குள் ஒரு சமஷ்டி—சம்மேளனத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்" என்று, உங்கள் திராவிடநாடு கிளர்ச்சி என்னவென்று சில ஆண்டுகளுக்கு முன்னர் கேட்ட "மெயில்" நிருபரின் கேள்வியொன்றுக்குப் பெரியார் விடையளித்திருப்

பதிலிருந்து பூரண உரிமைகளையுடைய நாடுகள் உள்ள சமஷ்டி முறையைத்தான் திராவிடர் கழகம் விரும்புகிறது என்பதைத் தலைவர் பெரியார் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்த விளக்கம் நமது கோரிக்கை பிற வட்டாரத்தவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதல்ல என்பதையும், நியாயத்தையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. இனியாகிலும் இந்த உண்மையை உணர்ந்து நமது கூட்டுத் தோழர்கள் திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியில் பங்கு கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

## சமஷ்டியா? சம்மேளனமா?

“தமிழ், ஆந்திரம், மலையாளம், கர்னாடகம் ஆகிய நான்கு பிராந்தியங்களையும் சில விஷயங்களில் தனியாக இயங்கும்படி விட்டுவிடலாம். மீதமுள்ள சில விஷயங்களைக் கவனித்து மேற்பார்வையிட, நான்கு அங்கங்களும் அடங்கிய ஒரு சம்மேளனம் அமைக்கலாம்” என்று ஆந்திரபல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் சமீபத்தில் தம்மைப் பேட்டி கண்டு கேட்ட ஒரு நிருபரின் கேள்விக்கு விடையளித்துள்ளார். இவர் தமது கருத்தில் “சம்மேளனம்” என்ற வார்த்தையை உபயோகித்திருப்பதிலிருந்து, நமக்கு வேண்டியது சம்மேளன (Confedaration) அமைப்பா அல்லது சமஷ்டி (Federation) அமைப்பா? என்ற சர்ச்சை எழக்கூடும் சிலருக்கு. மேற்சொன்ன பகுதிகளிலிருந்து சமஷ்டிமுறை என்றால் என்ன என்பது ஓரளவு விளங்கியிருக்கும். இப்பொழுது சம்மேளனம் என்றால் என்னவென்று கவனிப்போம்.

சமஷ்டி என்றால் பல மாகாணங்களை—நாடுகளை—தன்னகத்தே கொண்டு விளங்கும் ஒரு பொது சர்க்கார். ஆனால் சம்மேளனம் என்பதோ பல சர்க்கார்கள் தங்களிடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு பொது ஸ்தாபனம், அல்லது சங்கம். சம்மேளனத்தை சர்க்கார் என்று கூறுவதற்கு பொருந்தாது. அதுவுமன்றி அந்த அமைப்பு சுதந்தரமான அதிகாரங்களைக் கொண்டதாக இல்லாமல், மாகாணங்கள் அவ்வப்போது அதனிடம் ஒப்படைக்கும் விஷயங்களைக் கவனித்து மேற்பார்வையிடுவதாகத்தான் இருக்கும். மக்களைப் பொறுத்தமட்டிலுங்கூட—அவர்கள் தங்களை மாகாணங்களின் குடி மக்கள் என்றுதான் கூறிக்கொள்வார்களே தவிர தங்களைச் சமஷ்டியின் குடிகள் என்று கூறிக்கொள்ள மாட்டார்கள். இதிலிருந்து சம்மேளனம் மக்களின் ஸ்தாபனம் என்று கருத முடியாது என்பதும், அது சர்க்கார்களின் பிரதிநிதித்துவ சங்கம்தான் என்பதும் விளங்கும். 1815—1866ம் வருடம் வரை ஜெர்மனியில் சம்மேளன முறைதான் அமுலிலிருந்து வந்தது. இந்த சம்மேளனத்தை ஜெர்மானியர்கள் “சர்க்கார்கள் சங்கம்” என்ற பெயருடனேயே அழைத்து வந்தார்கள். அங்கு 1866க்குப் பின்னர் ஏற்பட்ட சமஷ்டியை “சங்க சர்க்கார்” என்று பொருள்படும்படியான பெயரிட்டு அழைத்து வந்தார்கள். ஸ்விட்ஜர்லாந்திலும் 1848ம் வருடத்திற்கு முன்னர் சம்மேளனமும் பின் சமஷ்டியும் ஏற்பட்டது.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் 1777ல் தங்களிடையே அய்க்கிய அமெரிக்க நாடுகள் என்ற சர்க்காரை ஏற்படுத்திக்கொள்வதின் பொருட்டு, ஒன்று கூடி ஒரு அரசியல் திட்டத்தைத் தயாரித்தார்கள் என்றும், அந்தத் திட்டம் 1781ல் அமுலுக்குவந்ததென்றும் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு சம்மேளன முறையைத் தழுவியதாகவே இருந்தது. இந்த அமைப்பு ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் அமுலிலிருந்து வந்தது. ஆனால், இம்முறையை மாற்றி, போதிய அதிகாரங்களையுடைய ஒரு பொது சர்க்காரை ஏற்படுத்தினாலொழிய, குடியேற்றங்கள் நன்றாக அபிவிருத்தியடைந்து முன்னேற முடியாதென்று பலர் கருத ஆரம்பித்தனர். எனவே, “இப்பொழுதுள்ள கான்பெடரேசன் (சம்மேளனம்) அமைப்புப் போதிய நிர்வாக அதிகாரம் உடையதாக இல்லை. அமெரிக்க நாடுகளின் அய்க்கியத்தைக் காப்பாற்றுவதற்கு இந்த ஏற்பாடு போதாது. இதை மாற்றி அமைப்பதற்காக, மே மாதம் 2வது திங்கட்கிழமையன்று, பதின்மூன்று நாடுகளிலிருந்தும், பிரதிநிதிகள் ஒரு மாநாட்டில் கூடவேண்டும். ஒரு அரசியலைத் தயாரித்து அதை அவர்கள் காங்கரசினிடம் சமர்ப்பிக்கவேண்டும்” என்ற ஒரு தீர்மானத்தை 1787 பிப்ரவரியில் சம்மேளனத்தில் நிறைவேற்றினார்கள். ரெட் அய்லென்ட் என்ற குடியேற்றம் நீங்கலாக மீதமுள்ள 12 குடியேற்றங்களும் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. இப்படிக் கூட்டப்பட்ட அ. நி. சபை 55 பிரதிநிதிகளைக் கொண்டதாக விருந்தும், தயாரிக்கப்பட்ட அரசியல் நகல் திட்டத்தில் 39 பிரதிநிதிகள்தான் கையொப்பமிட்டனர். இந்தத் திட்டம் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரப்படாமல் மாகாண சட்டசபைகளின் சம்மதத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் புதிய அரசியல் அமைப்பை எந்தெந்த மாகாணங்கள் அங்கீகரிக்கின்றனவோ, அவைகளை மட்டும் சேர்த்துக்கொண்டு புதிய அரசியலை அமுலுக்குக் கொண்டு வருவதென்று அந்த சபை தீர்மானித்திருந்தது. பல மாகாணங்கள் இந்த நகல் திட்டத்தை உடனேயும், சில மாகாணங்கள் 1788லும் உறுதிப்படுத்தியது. ஏற்கனவே நிச்சயித்திருந்தபடி 1789 மார்ச்சு மாதம் 4-ம் தேதி புதிய சமஷ்டியின் அரசியல் அமைப்பு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த சமஷ்டியின் ஆரம்ப காலத்தில் 11 மாகாணங்கள்தான் இதில் சேர்ந்திருந்தன. அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளாத ரெட் அய்லண்ட், இந்தப் புதிய அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டு மே மாதத்தில் சமஷ்டியில் சேர்ந்து கொண்டது. அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டிருந்த வடக்குக் கரோலீனாஎன்ற குடியேற்றம் 1789 நவம்பரில் சமஷ்டியில் சேர்ந்து கொண்டது. வெர்மாண்ட் என்ற குடியேற்றம் சுதந்தரப் பிரகடன காலத்தில் அதில் பங்கு கொள்ளாமல் தனித்திருந்தது. இந்தக் குடியேற்றம் 1791ல் அமெரிக்க அய்க்கிய நாடுகள் சமஷ்டியில்சேர்ந்து கொள்ள விரும்பவே, அதன்படி சேர்த்துக்கொள்ளப்பட்டது. இம்மாதிரி 11 குடியேற்றங்களுடன்ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க சமஷ்டி அரசாங்கம் இரண்டு வருடங்களில் 14 குடியேற்றங்களையுடையதாயிற்று. இதன் பின்னர், மக்கள் வெவ்வேறு பகுதிகளில் சென்று குடியேறி, தனி மாகாணங்களை ஏற்படுத்தி சமஷ்டியுடன் சேர்ந்து கொண்டே வந்தனர். இன்றைக்கு அமெரிக்க சமஷ்டி 48 மாகாணங்களை—நாடுகளை—யுடையதாக விளங்குகிறது.

மேலேகண்ட வரலாற்றிலிருந்து பல நாடுகள் ஆரம்ப காலத்தில் சம்மேளன முறையைப் பின்பற்றிய போதிலும், பின்னர் சமஷ்டியை ஏற்படுத்திக் கொண்டிருப்பது நன்கு விளங்கும். அன்றியும் இன்று சம்மேளன அமைப்பு உள்ள நாடு எதுவும் இல்லையென்றே கூறப்படுகிறது. அமெரிக்கா சம்மேளனத்தை மாற்றி, சமஷ்டி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அமெரிக்க சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையைக் கொண்டு பார்க்கும்பொழுது ஒரு நாட்டு மக்களின் ஒற்றுமை புணர்ச்சி பாதுகாக்கப்படுவதற்கும், நாடு பலதிறப்பட்ட துறைகளிலும் முன்னேறி அபிவிருத்தியடைவதற்கும் சமஷ்டி முறைதான் இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும்.

(தொடரும்)

“புத்ததாசன்”

(2ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்றவாறுதான் எந்தத் தர்மமும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண்டியதில்லை. இப்போது நமது நாட்டில் 22-கோடி இந்துக்களிருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள்களோ புராணங்களின் கணக்குப்படி 33-கோடி கடவுள்களாயிருக்கின்றன. இதனைப் பங்கிட்டால் ஒரு ஆசாமிக்கு ஒன்றரைக்கடவுள் வீதம் வரும். உலகிலே மக்களைவிட கடவுள்கள்தான் அதிகமாயிருக்கிறது. இவ்வளவு கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும். நாட்டின் பெருமையை வளர்க்க, மக்கள் கஷ்டத்தைப் போக்க, அறிவை வளர்க்க கல்வி அத்தியாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழிலபிவிருத்தி அவசியம். எந்தத் தேசத்திலும் இவையிரண்டும் இன்றியமையாத அவசியமான அம்சங்கள். நம் நாட்டிலோ நூற்றுக்கு 93-பேர் படிப்பில்லாத தற்குறிகளாயிருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அதுபோலவே சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு வெளி நாடுகளுக்குப் பிழைப்புக்காகத் துறைமுகங்கள்தோறும், கப்பல்தோறும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதிசெய்யப்படுவதான கோரக் காட்சியைத் துறைமுகங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும், சாப்பாட்டுக்கு வகையின்றியும் கடல் கடந்து ஜீவிக்கச்செல்லும் ஏழை மக்கள் தொகைகளை, இச்சென்னை மாகாணத்தில் மட்டும் மாதமொன்றுக்கு லட்சத்திற்கு அதிகமாகக்காணலாம். இவர்கள் குழந்தைகுட்டிகளுடனும் வயோதிகர்கள் கர்ப்பிணிகளுடனும் செல்வதான பரிதாபத்தை என்னவென்று சொல்வது. இங்குள்ள கஷ்டத்தைவிட அங்கு போய்ச் சாகலாமென்றுதான் மனம் முறிந்து போகிறார்கள். இக்கொடுமைகளைக் கவனித்து பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத்தானிருக்கின்றன.

இங்கு சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் உற்சவ வேடிக்கைகளுக்கும் சதுர் ஆட்டங்களுக்கும் லட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றன. திருப்பதி முதலிய தேவஸ்தானங்களுக்கும், முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 லட்சத்திற்கு அதிகமாக மாதா மாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய சட்டி அரணைப் பூசைக்குச் சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறிருக்க அச்சாமியின் பிள்ளைகள், சாமியேகதியென இருக்கும் மக்கள் கஞ்சிக்கலைந்து கொண்டு பிழைக்க வழியில்லாது ஆயிரக்கணக்காகக் கப்பலேறி வெளிநாடு சென்று துன்புறுகிறார்கள். இவையிரண்டினையும் சேர்த்துப் பார்த்தால், அந்த சாமிக்குத்தான் அதிக அவமானமென்பது நன்கு விளங்கும். அத்தகையசாமிகளுக்குஇருக்கும் சொத்துக்களுக்கும் ஆடம்பரங்களுக்கும், வாண வேடிக்கைகளுக்கும், சதுர் கச்சேரிகளுக்கும் ஒருவிதமான அளவில்லை. ராஜாவுக்குக்கூட அவ்வளவு ஆடம்பரமில்லை. ராஜாவாயினும் கொடுங்கோன்மையினால் அந்த சுகங்களை, ஜனங்கள்படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கின்றான் என்று சொல்லலாம். ஆனால், கருணை வள்ளல் என்ற கடவுள் இப்படி வீணாக்குவதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கலாமா? இதனால் நாம் கடவுள் மீது குற்றம் சொல்லவில்லை. அது என்ன செய்யும். இன்றைக்கு யாராவது தங்கக்காரை போட்டால், பேசாமல் போட்டுக் கொள்ளுகிறது. யாராவது கழட்டிக் கொண்டுபோனாலும் கல்லுப் போல் பேசாமல் சும்மா இருக்கிறது. சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழற்றிக் கொண்டு போய்விட்டதாயும் பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள். ஏன் இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர்கள் தற்குறிகளாயிருக்க வேண்டும்? இதற்கும் வறுமைக்கும் காரணமென்ன? ஆனால், நான் உங்களைச் சந்தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம். "வெள்ளைக்கார நீச அரசாங்கத்தார் நம் பணத்தைக் கொள்ளையிட்டுப் போவதாகச் சிலர் கூச்சலிடுகின்றனர். அந்த நீச அரசாங்கத்தால்தான் சரஸ்வதியும் நம் நாட்டைவிட்டு ஓடிவிட்டாள்" என்கின்றனர், மற்றும் சிலர். ஆனால் நம் நாட்டைவிட்டோடிய சரஸ்வதி அந்த நீச நாட்டுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறாள். வெள்ளைக்காரன் கொள்ளையிட்டுப் போவதையும், சாமிகளுக்கும், சடங்குகளுக்கும் செலவிடுவதையும் கணக்குப்பார்த்தால், சாமிகளுக்குச் செலவாவதுதான் பன்மடங்கு அதிகமாகும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பேரால் செலவாகும் பணமும், கஷ்ட நஷ்டமும், அசௌகரியங்களும் கணக்கிட முடியாது. பணம் சம்பாதிப்பதில் எத்தனையோ தந்திரமும் சூழ்ச்சியும் செய்யும் அறிவாளிகளுங்கூட இவ்வாறு செலவிடுவதில், அந்தத் தந்திரமொன்றுமில்லாமல் முட்டாள்களாகத்தான் நடந்து கொள்கின்றனர். அபிஷேகத்தில் 150 ரூபாய் கொடுத்தாலென்ன? 10 ரூபாய் கொடுத்தாலென்ன? வித்தியாசமென்னவென்று யாராவது சிந்திப்பதுண்டா? சென்னை மாகாண சர்க்காரின் கணக்குப்படி சாமிகளுக்கு வருமானம் 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர, கணக்கில் வராத கொள்ளைகளும் போக்கு வரத்துத் தரகர் செலவும் சொல்லவேண்டியதில்லை. கணக்குப் பார்த்தால் சாமிகளுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வருமான வரியைவிட அதிகமாகுமேயன்றி ஒருவிதத்திலும் குறையாது. தர்மமென்றால் சாப்பாடு போடுவது தானாவென்று கேட்டால், அப்படிக் கேட்பது பாவம் என்ற தர்ம முறையைத்தான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்குச் செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி சுமார் 25 வருடங்களுக்கு நம் சாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தால், பிறகு நம் நாட்டில் ஒருவன் கூட மருந்துக்கும் தற்குறியாயிருக்கக் காணமுடியாதென்பது திண்ணம். உள்ளதுள்ளபடி உண்மையைச் சொன்னால் அவன் தப்பு சொன்னான்; இவன் நாஸ்தீகப் பேச்சு பேசுகிறான் என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்குக் குறைவில்லை. மேடை மீதேறி வெள்ளைக்காரர்களைத் தூற்றி

விடுவோமென்று பயமுறுத்தலாம். மிரட்டினாலும் அர்த்தத்தோடல்லவா மிரட்டவேண்டும்? ஜேபியில் எலிக்குஞ்சு இருக்கிறது எடுத்துவிட்டால் செத்துப்போவாய் என்றால் எவன் பயப்படுவான்? எடுத்துவிடு ஒரு கை பார்ப்போமென்றுதான் சொல்லுவான். மார்க்கத்துக்கும், தகுந்தவழிக்கும் நமது அறிவையும், செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாரையும் வெல்லமுடியாது. ஒரு கூட்டத்தார் நம்மைத்தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக்கொண்டிருக்க முயல்வது சரித்திரபூர்வமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மதவிஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக்காரன் நம்மைவிடக் கேவலமாக இருந்திருப்பதை அவர்கள் தேசச்சரித்திரமே நன்கு விளக்குகிறது. அங்கிருந்த புரோகிதமும் சாமிகளும் இப்போது எங்கு போயின? எல்லாம் இங்கு வந்து சேர்ந்தன. அவர்கள் எல்லாவற்றையும் இங்கு மூட்டை கட்டியனுப்பிச் செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு அந்த விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கியிருப்பதால் நாளுக்கு நாள், அந்நாட்டார் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். அவர்கள் சாமிக்கு உற்சவமில்லை, தேர் இல்லை, திருவிழா இல்லை. அப்படியிருந்தும் அந்தச்சாமி அவர்கள் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாயிருக்க, நம் சாமிகளுக்கு லட்சக்கணக்கான பணம் செலவிட்டு தேர், திருவிழா நடத்தியும் நாம் இந்தக் கதியிலிருக்கிறோம். நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டுக்குப் போகின்றன என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேற முயற்சி செய்வதில்லை. அண்மையில் ருஷியாவில் செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் நூதனமுறையை ஒருவர் கண்டு பிடித்ததாகப் பத்திரிகைகளில்படித்திருப்பீர்கள். இத்தனைக்கும் அது நாஸ்திகம் நிறைந்த நாடு. நாஸ்திகருக்கு நரகம் வேண்டுமானால் ருஷியாவிலிருப்பவர்களுக்கே இருப்பிடம் சரியாய்ப் போய்விடும். ஆதலால் வேறு எந்த நாஸ்திகர்களுக்கும் நரகத்திலிடமிராது. அவ்வளவு நாஸ்திகமாயிருக்கும் ஊரில், செத்தவனைப் பிழைக்கவைத்து சாமியோடு போட்டி போடுகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுக்கூட செலவில்லை. முஸ்லீமும் அப்படித்தான். வெள்ளைக்காரன் கோயிலுக்குப்போனால் துணி அழுக்கை வெளுப்பதற்குச் செலவிடுவதைவிட வேறு செலவில்லை. விவசாயத்திலும் அவர்கள் எந்தப் பழத்தை, எந்த நிறத்துடன், எந்தச் சுவையில் பயிரிடவேண்டுமென்று ஆராய்ச்சிசெய்து, அதற்குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவுகட்டவேண்டுமானாலும் பார்ப்பானைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து, அந்தந்த ஏருக்கும் மாட்டுக்கும் பூசை போட்டு, உழுவதனால்தான் இக்கதியிலிருக்கிறோம். நமக்கு இவ்வளவு கோடி சாமிகளும், இவ்வளவு பணச் செலவும் மிகுந்தும், நாம் கடுகளவாவது முன்னேற முடியாதிருக்கிறோம். பூகோளசாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரின்தகப்பனும், கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக்கொண்டு சமுத்திரக் கரைக்குத் தர்ப்பணம் செய்து வைக்க வந்துவிடுகிறான். இவன் பேச்சைக் கேட்டு குளிக்கப்போனால் நம்மை முதலை இழுத்துக்கொண்டுபோய் விடுகிறது. கிரகண ஸ்நானத்துக்குப் போவோமென்று சொல்லும் எம். ஏக்களும், பி. ஏக்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக்காலத்திலும் சந்திர சூரியனை ராகு கேதுவென்ற பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன்மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்தபாடில்லை. தேச முன்னேற்றத்திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத்திற்கோ முட்டுக்கட்டையாயிருக்கும் எவற்றையும் ஒழிக்க முயலவேண்டும். அம்மாதிரி செய்யும் தேசமும், மதமும், சமூகமும் தான் முன்னுக்கு வரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்திருந்த துருக்கி, தற்போது அதனை இருந்தவிடம் தெரியாமல் மூட்டைகட்டியனுப்பிவிட்டு, முன்னேற்றத்துக்கு வழிதேடியதனால்தான் தற்போது ஐரோப்பாவில் மற்றைய நாடுகளைப் போல நல்ல நிலைமையையடைந்து வருகிறது. நாம் தர்மம் வேண்டாமென்று சொல்லவில்லை. நம் மதத்திலுள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து, பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அந்தச் செய்து, மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும், சத்தியமும், ஜீவகாருண்ணியமும் பரவச் செய்வதற்கு வழிதேடவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். வீண் செலவிடும் பணங்களை உண்மையாகக் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்து உபகாரம் செய்வதில், செலவிடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக் கொண்டு சுகமாயிருந்த கூட்டத்தார், இப்போது கூலிகளையும் குறும்புப் பிரசாரத்தில் ஏவிவிடுகின்றனர். எந்தக் காலத்திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம்நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந்திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கறியப்படும். அர்த்தமற்ற கொள்கைகளை ஒழித்து, ஒழுக்கமே பிரதானமென்று சீர்திருத்தி, மற்றவனுக்கு உபகாரம் செய்வதுதான் மோட்சமென்று புகட்டவேண்டுவது அவசியம். கஷ்டப்படுபவர்களுக்கு உதவியளித்துத் திருப்தி செய்வதுதான் மேலான புண்ணியம். இவற்றைச் சொன்னால் என்ன நாத்தீகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக் குழப்பி அவர்கள் அறிவைக் கட்டிப்போட்டு நான் சொல்வதை நம்பு, இல்லாவிட்டால் பாவம் என்று நான் சொல்லவில்லை. எதிலும் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்போதுதான் நம் நாடு முன்னேற்றமடையுமேயன்றி, என் பாட்டன், முப்பாட்டன் போனவழி போகிறேன் என்ற மூடக்கொள்கைகளால் நாடு நாளுக்குநாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை எடுத்துக்காட்டினேன். அதில் சரி எனத் தோன்றியதை ஒப்புக்கொண்டு அதன்படி நடக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் சொல்வதில் பிசகிருந்தால் என் அறியாமைக்குப் பரிதாபப்படும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

★

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்
என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம்.
59. கச்சேரி வீதி, ஈரோடு.